வார இதழ்

# தேசியம்

www.thesiyamnews.com

THESIYAM தේසියම්

இதழ் - 12 |26.11.2023 - 02.12.2023 |வள்ளுவர் ஆண்டு 2054 |பக்கங்கள் 12 | விலை : ரூ.80.00



பக்கம் 02

## தேசியத் தலைவர் மேதகுவின் அகவைநாள்! கார்த்திகை 26

## தமிழர் தாயகத்தில் அரச புலனாய்வு மோப்பம்!

# கொண்ட இலட்சியம் குன்றிடா எங்கள் வீர மறவர்களின்




பக்கம் 02

## தாயகம் புலம்பெயர் தேசம் எங்கும் எழுச்சிக் கோலம்.



பக்கம் 07

### தமிழீழத் தனியரசுக்காக வித்தானவர்களை உணர்வுபூர்வமாக அஞ்சலிப்போம்.

தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவை அறைகூவல்



பக்கம் 10

## வட்டுக்கோட்டையில் பொலிஸ் சித்திரவதை கூடமா? அலெக்சின் மரணத்தின் எதிரொலி! விஞ்ஞான பூர்வ அறிக்கை கேட்கிறது மன்று!!

தேசியம் THESIYAM
ஆசிரியர் பீடம்
தொலைபேசி : +94 76 567 3339
மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com
இணையம் : www.thesiyamnews.com



## எங்கே! எங்கே! ஒரு கணம் சிந்தியுங்கள்....

1982 நவம்பர் 27 இல் தமிழீழ விடுதலைப் புலிகளின் முதல் போராளி லெப். சங்கர் வீரச்சாவடைந்த தன் நினைவாக விதைக்கப்பட்ட விடுதலைப்புலிகள் அனைவரதும் தினமாக மாவீரர் தினம் நினைவு கூறப்படுகின்றது.

இது தமிழர் நாட்காட்டியில் ஒரு முக்கிய புனித தினமாகும். உத்தியோகபூர்வமாக "தேசியத் தலைவர்" அவர்களின் உரையும் இத்தினத்தில் வெளியிடப்படுவதால் இந்நாள் உலகத் தமிழ் மக்களைப் பொறுத்தவரை மிக முக்கிய நாளாக அமைந்தது.

கடந்த மூன்று தசாப்த காலப்போர் வாழ்வில் தன்னலமற்று தங்கள் உயிர்களை தியாகம் செய்தவர்களை நினைவு கூறும் இந்த நாளில் "ஒரு தரம் விழிகளைத் திறவுங்கள்" என்று கூறிக்கொண்டு அவர்களுக்குச் செலுத்தும் உளரீதியான அஞ்சலியும், காணிக்கையும் எது தெரியுமா? முன்னாள் போராளிகள், மாவீரர் குடும்பங்கள் அவர்கள் குறித்து கரிசனை கொள்வது தான் நாம் மாவீரர்களுக்குச் செலுத்தும் இதயபூர்வமான காணிக்கையாகும்.

மேலே குறித்த இந்த சிந்தனைக்கான கேள்வி என்னவென்றால் உண்மையிலேயே நாங்கள் ஒரு விடுதலைக்காக போராடிய சமூகம் தானா? இன்று நடப்பவற்றைப் பார்த்தால் அப்படி நம்ப மனம் ஏனோ மறுக்கிறது. எப்படி எங்களால் இவ்வளவு சாதாரணமாக எல்லாவற்றையும் உதறித் தள்ளிவிட்டு கடந்து செல்ல முடிகின்றது.

கடந்த மூன்று தசாப்தங்களாக இன விடுதலைக்காகப் போராடி போராட்டத்தின் பக்கபலமாக இருந்த போராளிகள் தான் இன்று நடு வீதியில் வாழ வழியின்றி இருக்கின்றனர். இந்தப் போராட்டத்தின் உயிர் மூச்சாக இருந்தவர்கள் தான் இன்று சரணடைந்து எதிர்காலத்திற்காக ஏங்கிக் கொண்டிருக்கின்றனர். விடுதலைக்கு உயிர் கொடுத்த போராளிகள் இன்று மரணத்திற்கு இரையாகிக் கொண்டிருக்கின்றனர்.

உங்கள் கனவிற்கு முகம் கொடுக்க போராடியவர்கள் இன்று தங்கள் சமூக முகமிழந்து இருக்கின்றனர். இவர்களை காப்பாற்ற வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு தமிழனுக்கும் புலம்பெயர் உறவுகளுக்கும் உண்டு. இதனை தட்டிக் கழிக்கும் எவருமே நிச்சயமாக மனசாட்சி உள்ள மனிதர்களாக இருக்க முடியாது. ஏனென்றால் நீங்கள் அனைவரும் இன்று சிறப்பாக வாழ்ந்து கொண்டிருப்பது அவர்களது பெயரால் இன்று களத்திலும், புலத்திலும் நீங்கள் தூக்கிப் பிடிக்கும் அரசியல் சுலோகங்களில் இருப்பதெல்லாம் அவர்களின் குருதி தொட்டு எழுதிய வாசகங்கள் தான்.

ஆயிரம் சாட்சிகளை விடப் பெரியது மனச்சாட்சி என்று ஒரு கருத்து உண்டு. மனச்சாட்சி உறுத்தலுக்கு உட்பட்டு ஒவ்வொருவரும் பாதிக்கப்பட்ட மக்கள் குறித்தும், போராளிகள் குறித்தும் ஏதோ ஒரு வகையில் குற்ற உணர்விற்கு ஆட்பட்டவர்களாகவே இருக்கின்றோம்.

கார்த்திகை மாதத்தை முன்வைத்து புதுவை அண்ணன் எழுதிய கவிதை வரிகள் இவை! கேட்கிறதா மணி? கேட்கிறதா பாடல்? தெரிகிறதா நெய் விளக்கு? எங்களாலும் சில ஒலிகளை கேட்க முடிகிறது எங்களாலும் சில காட்சிகளை காணமுடிகின்றது.

நண்பர்களே! அது எங்களை காப்பாற்றுங்கள் என்னும் பாதிக்கப்பட்ட மக்களின் கதறல்கள். இறப்பை நெருங்கிக் கொண்டிருக்கும் அங்கவீனமடைந்த அந்தப் போராளிகளின் இறுதி குரல்கள். வெள்ளத்தில் இடுப்பளவு தண்ணீரில் தனது கைக்குழந்தைகளை தூக்கிக் கொண்டு நிற்கும் தாய்மாரின் காட்சிகள். இரவில் தான் தூங்கிவிட்டால் தன் குழந்தைகளை பாம்பு தீண்டி விடுமோ, நட்டுவக்காலி குத்தி விடுமோ என்று அஞ்சி விழித்துக் கொண்டிருக்கும் உறவுகளின் காட்சி தான் எங்குமே தெரிகிறது.

மணியும் இல்லை, பாடலும் இல்லை, ஏரியும் நெய் விளக்கும் இல்லை. நண்பர்களே! கதறலும், கண்ணீரும், அவமானத்தில் கூனிக்குறுகிய முகங்களும் தான் இங்கு வாழ்வு. அவர்கள் இப்போதும் இருக்கிறார்கள் ஆனால் பின்னர் இறந்து போகலாம். இறந்து கொண்டிருப்பவர்களை காப்பாற்றுவது எங்கள் முன்னுள்ள ஒரே ஒரு கடமையாகும். மனச்சாட்சி உள்ள ஒவ்வொரு புலம்பெயர் எம் உறவுகளும் ஒரு கணம் இறந்து கொண்டிருக்கும் உங்கள் உறவுகள் குறித்து சிந்திக்குமாறு நாம் கூறுகின்றோம். செத்துக் கொண்டிருக்கும் போராளிகளின் வாழ்வு குறித்து சிந்தியுங்கள். இந்த புனித மாவீரர் நாளிலாவது இறந்து கொண்டிருக்கும் மக்கள் குறித்தும் எம் போராளிகள் குறித்தும் ஒரு கணம் சிந்தியுங்கள்.

# சிங்கள இளையோர்களே, நினைவேந்தும் உரித்தை நிலைநாட்டத் துணைசெய்யுங்கள்

## நாடாளுமன்றில் சிறீதரன் எம்.பி கோரிக்கை!!!

ஈழத்தமிழர்களின் நெடுங்கால மரபுகளின்வழி இம்முறையும், இனிவரும் காலங்களிலும் எமது உறவுகள் புதைக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று விளக்கேற்றி, மலர்தூவி, கண்ணீர் சிந்தி, வழிபடுவதன் மூலம் எங்களைத் நாங்களே ஆற்றுப்படுத்திக் கொள்கின்ற நினைவேந்தல் நிகழ்வுகளை, இராணுவத் தலையீடுகளோ, பொலிசாரின் அச்சுறுத்தல்களோ அற்று அமைதியான வழியில் கடைப்பிடிப்பதற்கு வழிவகை செய்வதன்மூலம் இந்த நாட்டில் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்த முன்வாருங்கள் என்று சிங்கள இளையோரை முன்னிறுத்தி நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

வெள்ளிக்கிழமை (24) நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொண்ட அவர், தமிழ்த்தேசிய மாவீரர் நாள் நெருங்கியிருக்கும் இந்தக் காலப்பகுதியில் வடக்கு, கிழக்கு தமிழர் தாயகப் பிரதேசங்களில் அதிகரிக்கப்பட்டிருக்கும் இராணுவக் கெடுபிடிகள் குறித்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார். அவரது உரையில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்ததாவது,

2015 ஆம் ஆண்டு ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் கொண்டுவரப்பட்ட நிலைமாறுகால நீதிப் பொறிமுறையை இலங்கை அரசு ஏற்றுக்கொண்டதற்கமைய, ஈழத்தமிழர்கள், இனவிடுதலைக்காக உயிர்துறந்த தமது பிள்ளைகள் விதைக்கப்பட்ட விளைநிலங்களான துயிலும் இல்லங்களுக்குச் சென்று நினைவேந்தும் உரிமையை நிலைநிறுத்தத் தொடங்கியிருந்தார்கள். ஆனால், தமது உறவுகளை இழந்து துயருறுகின்ற நெஞ்சம் எவ்வாறு இருக்கும் என்பதை உணரத்தலைப்படாத அதிகாரக் கரங்கள், அடிப்படை மனிதாபிமான உணர்வுகளைக் கூடப் புறந்தள்ளி இன்னுமின்னும் எங்கள் மக்களை வஞ்சிக்கும் செயற்பாட்டையே மிகக் கச்சிதமாக மேற்கொண்டு வருகின்றன.

இனி ஒருபோதும் போரொன்றை விரும்பாத எமது மக்கள், பயங்கரவாதம் எனப்படுகின்ற இயல்புகளுக்கு ஒத்திசையாத வகையில் தங்களின் பிள்ளைகளை, அவர்கள் புதைக்கப்பட்ட நிலங்களில் சென்று வழிபடுவதற்கும், விளக்கேற்றுவதற்கும், கண்ணீர்விட்டு அழுவதற்குமான சந்தர்ப்பங்களைத் தடுக்கும் வகையில் அச்சுறுத்தல்களும், விசாரணைகளும் பரவலாக அரங்கேற்றப்படுகின்றன.

போர் முடிவுற்று பதின்மூன்று ஆண்டுகள் நிரம்பிய பின்னரும், வடக்கு, கிழக்கிலுள்ள 27 மாவீரர் துயிலும் இல்லங்களில், யாழ்ப்பாண மாவட்டத்தின் கொடிகாமம், எள்ளங்குளம், கோப்பாய் ஆகிய துயிலும் இல்லங்கள், கிளிநொச்சி மாவட்டத்தின் தேராவில் துயிலும் இல்லம், முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை, ஆலங்குளம், அளம்பில், நெடுங்கேணி களிக்காடு, மற்றும் மணலாறிலுள்ள உதயபீடம், கோடாலிக்கல் புனிதபூமி ஆகிய துயிலும் இல்லங்கள், வவுனியா ஈச்சங்குளம் துயிலும் இல்லம், மட்டக்களப்பு தாண்டியடி துயிலும் இல்லம் ஆகிய பன்னிரண்டு மாவீரர் துயிலும் இல்லங்கள் இன்றுவரை இராணுவப் படை முகாம்களாக முற்று கையிடப்பட்டுள்ளன. கிளிநொச்சி மாவட்டத்தின் தேராவில் துயிலும் இல்லத்தை விடுவிக்கக் கோரி கடந்த 2023.11.11 ஆம் திகதி பொதுமக்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளின் ஏற்பாட்டில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இவ்வாறானதொரு சூழலில், தமது பிள்ளைகளின் கல்லறைகள் அத்தனையும் போரியல் மாண்புக்குப் புறம்பான வகையில் இடித்தும், பெயர்த்தும் அழிக்கப்பட்ட பின்னரும், அந்தக் கல்லறைகள் நிறைந்திருந்த துயிலும் இல்லங்களைத் தமது புனிதபூமியாக எண்ணியே தமிழர்கள் இன்றளவும் பூசிக்கிறார்கள். திரும்பும் திசையெல்லாம் ஆக்கிரமிப்பின் கால்கள் ஆழ வேரூன்றிப் போயிருக்கும் தமிழர் தாயகத்தில், இராணுவத்தால் விடுவிக்கப்பட்ட துயிலும் இல்லங்கள் மீதான ஆக்கிரமிப்பும், வழிபாட்டுரிமை மீதான தடையும் மீளவும் வலிந்து ஏற்படுத்தப்படக் கூடும் என்ற அடிப்படையில், மக்களிடையே ஆழப்பதிந்திருக்கும் அரசு மீதான நம்பிக்கையீனமும், துயிலும் இல்லத்தின் புனிதத்துவத்தைப் பாதுகாக்க வேண்டுமென்பதில் அவர்களுக்கிருக்கும் ஆத்ம எதிர்பார்ப்பும், அத்துயிலும் இல்ல வளாகங்களை எல்லைப்படுத்துவதிலும் அலங்கரிப்பதிலும் ஆர்வத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

அத்தகைய மக்களின் எதிர்பார்ப்புக்கு அமைய, காலத்தின் தேவை கருதியும் துயிலும் இல்ல மரபுகளுக்கமையவும் கனகபுரம், முழங்காவில், வன்னிவிளாங்குளம் ஆகிய மூன்று துயிலும் இல்லங்களினதும் நுழைவாயில் முகப்புகளை, அரை நிரந்தரமானவையாக நிறுவியிருக்கிறோம். எமக்கெதிராக அரசு பூசமுற்படுகின்ற பயங்கரவாத முலாம் குறித்த எந்தக் குறியீடுகளும் அவற்றில் காட்சிப்படுத்தப்படவில்லை. ஆனால் போரை நினைவுபடுத்துகின்ற, நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கின்ற எந்தவொரு அடையாளங்களும் இல்லாத வெற்று முகப்புகளை நிறுவிய மைக்காக, இதுவரை நான் உட்பட பதின்மூன்று பேர் பொலிசாரால் தனித்தனியே விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளோம்.

தமிழர்களின் பூர்வீக மண்ணை ஆக்கிரமித்து, நூறு வீதம் தமிழ் மக்களின் புழக்கம் செறிவாக உள்ள தமிழர் தாயகப் பகுதிகளின் பெருநகரங்களிலும், பிரதான வீதிகளிலும் ஏராளமான போர் வெற்றிச் சின்னங்கள் நிரந்தரமாக நிறுவப்பட்டுள்ளன. குறிப்பாக கிளிநொச்சி நகர மத்தியில், டிப்போச்சந்திக்கும் கிளி/கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்துக்கும் அருகேயுள்ள சந்திரன் பூங்கா வளாகத்தில், தமிழர்களின் இதயங்களைத் துளைத்து உள்நுழைவதான தோற்றப்பாட்டை வெளிப்படுத்தும், துப்பாக்கிச் சன்னம் ஒன்றுடனான போர் வெற்றிச் சின்னமும், ஆனையிறவுப் பகுதியில் யு.9 பிரதான வீதியின் இருமருங்கும், இருவேறு போர் வெற்றிச் சின்னங்கள் நிறுவப்பட்டுள்ளன. இலங்கையைத் தாங்கி நிற்கும் வலிந்த கரங்கள் ஒருபுறமும், இராணுவச் சிப்பாய் ஒருவரின் இராணுவச் சீருடையுடனான உருவச்சிலை ஒருபுறமும் நிறுவப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் யு.35 பிரதான வீதியின் ஒருமருங்கில், ஆயுதம் தரித்த இராணுவச் சீருடை, சிங்கக்கொடி, துப்பாக்கி என்பவற்றை ஏந்தியவாறு வெற்றிக்களிப்பில் மிதக்கும் இராணுவச் சிப்பாய் ஒருவரது உருவச்சிலை நிறுவப்பட்டிருக்கிறது.

அடிப்படை உரித்துக்கோரிப் போராடிய ஒரு இனத்தைத் தோற்கடித்துவிட்டோம் என்கிற மமதையையும், போரின் குரூரத்தையும், படையினரது ஆக்கிரமிப்புச் சிந்தையையும் முகத்திலறைந்தாற்போல் பிரதிபலிக்கும் ஆயுத கலாசார நினைவுச் சின்னங்கள் சீர்குலைக்காத இன நல்லிணக்கத்தை, அவை நினைவுபடத்தாத போரியல் உணர்வுகளை, நினைவேந்தல் உரித்தை நிலைநாட்டுவதற்காக அமைத்த துயிலும் இல்ல முகப்புகள் சீர்குலைக்கும் என்று சிந்திப்பதுகூட ஆக்கிரமிப்பின் அதியுச்ச வெளிப்பாடாகவே தென்படுகிறது என்றார்.

இதன்போது தேராவில் துயிலும் இல்ல விடுவிப்புத் தொடர்பான ஆர்ப்பாட்டத்தின் போது கையளிக்கப்பட்ட மகஜரின் பிரதியும், புதிதாக நிறுவப்பட்டுள்ள துயிலும் இல்ல முகப்பின் நிழற்படமும், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள இராணுவ நினைவுச் சின்னங்களின் புகைப்படங்களும் சபாபீடத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதோடு நாடாளுமன்றிலும் காட்சிப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## தேசியத் தலைவர் மேதகுவின்...

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு இன்றுடன் வயது 69. தமிழ் மக்களின் உரிமைக்காக மூன்று தசாப்தங்களுக்கும் மேலாகப் போராடிய தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவரான மேதகு வே.பிரபாகரன் தமிழீழத் தேசியத் தலைவராக தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தவராவார்.

தேசியத் தலைவர் பிரபாகரனின் அகவை தினத்தை முன்னிட்டு தமிழர் தாயகத்தில் பொலிஸாரினதும், அரச, இராணுப் புலனாய்வாளர்களினதும் கண்காணிப்பு தீவிரப்படுத் தப்பட்டுள்ளது.

தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் அகவை தினத்தை சமூக வலைத்தளங்களில் கொண்டாடியோர், ஒளிப்படங்களையும் காணொலிகளையும் பதிவிட்டோர் கடந்த காலங்களில் பொலிஸாரால் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மாவீரர் நாள் - தாயகம் புலம்பெ...

தமிழ்த் தேசிய மாவீரர் நாள் பேரெழுச்சியுடன் உணர்வுபூர்வமாக தமிழர் தாயகப் பிர தேசங்களிலும், தமிழகம், புலம்பெயர் தேசங்களிலும் அனுஷ்டிக்கப்படவுள்ளது .

கடந்த 30 வருட கால ஆயுதப் போராட்டத்தில் ஆயுதம் ஏந்திப் போராடிய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த போராளிகள் போரில் உயிரிழந்தவர்களின் நினைவாக மாவீரர் வாரம் ஒன்றினை பிரகடனப்படுத்தி வருடந்தோறும் நினைவு கூர்ந்து வருவது வழக்கம். இவ்வாரத்தின் இறுதிநாளை மாவீரர் தினமாக அறிவித்தது மிகவும் எழுச்சியான முறையில் தமிழீழ விடுதலைப் புலிகளும், தமிழ் மக்களும் அனுஷ்டித்து வருகின்றமை வழமையானது. மாவீரர் தினமான ஒவ் வொரு கார்த்திகை மாதம் 27ம் திகதி அன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் மேதகு. வே.பிரபாகரன் அவர்களின் உரையும் இடம்பெறும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் முள்ளிவாய்க்காலில் மௌனித்த தன் பின்பு இம் மாவீரர் தினத்தை உலகம் எங்கும் புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களாலும் அங்கு இயங்குகின்ற பிரதான அமைப்புக்களாலும் பேரெழுச்சியுடன் உணர்வு பூர்வமாக அனுஷ்டித்து வருகின்றார்கள்.

கடந்த காலங்களில் தமிழர் தாயகத்தில் சிறிலங்கா அரச புலனாய்வாளர்களின் கெடுபிடிகள், அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் எமது தாயகத்து பொதுமக்களாலும், வடகிழக்கு பல் கலைக்கழக மாணவர்களாலும், தமிழ்த் தேசிய உணர்வாளர்களாலும் மற்றும் தமிழ் தேசியத்திற்கான அரசியல் கட்சியினராலும், பொது அமைப்புகளாலும் மாவீரர் தின நிகழ்வுகள் துயிலும் இல்லங்களிலும், பொது இடங்களிலும் உணர்வுபூர்வமாக அனுஷ்டி க்கப்பட்டு வருவது வளமை.

இம்முறை சிறிலங்கா அரசின் பாதுகாப்பு தரப்பினர் மற்றும் புலனாய்வாளர்களின் கெடுபிடி கள் வடக்கில் சற்றுக் குறைந்திருந்தாலும் கிழக்கில் அச்சுறுத்தல்களும், பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுகளும் வழமை போன்று நேரடியாகவும், மறைமுகமாகவும் இருக்கத்தான் செய்கின்றது.

வடக்கில் போலீஸ் தரப்பினர் மாவீரர் தின நிகழ்வுகளுக்கு தடை விதிக்குமாருகோரி நீதிமன்றங்களில் தொடுக்கப்பட்ட வழக்குகள் அனைத்தும் தமிழ் சட்டத்தரணிகளின் வாதத்திறமையால் உடைத்தெறியப்பட்டது என்பதும் அவதானிக்கப்படவேண்டிய ஒன்றே.

எனவே இவற்றையெல்லாம் பொருட்படு த்தாது எம் மக்கள் பெருமளவில் தமிழர் தாய கம் எங்கும் இடம் பெறும் மாவீரர் தின நிகழ் வுகளில் கலந்து கொண்டு மாவீரர்களுக்கு அஞ்சலிகளை செலுத்தி தங்களது தார்மீக கடமையை நிறைவேற்றுவார்கள் என்பதே நிதர்சனம்.



# ஈழத்தில் சுயாதீன ஊடகங்கள் மீதான அடக்கு முறையும்..! படுகொலையான நிமலராஜனின் தமிழ் ஊடக சேவையும்.!!

## போர்க்களத்தின் ஊடகவியலாளரான நிமலராஜன் 2000 அக்டோபர் 19இல் படுகொலை நினைவாக இக்கட்டுரை பிரசுரமாகிறது

ஈழத்தில் சுயாதீன ஊடகங்களை அடக்குவதற்கு வன்முறையைப் பயன்படுத்துவதிலும், அரச படைகளின் கொடூர தாக்குதல்களும் நீண்ட வரலாற்றைக் கொண்டிருக்கின்றது.

1981இல் ஈழநாடு எரிப்புமுதல், பின்னர் இந்திய இராணுவத்தால் முரசொலி, ஈழமுரசு, நிதர்சனம் தகர்க்கப்பட்டதில் இருந்து தமிழ் ஊடகங்களின் மீதான அடக்குமுறை பல்வேறு காலங்களில் ஆதிக்க சக்திகளினால் பிரயோகிக்கப்பட்டது.

தமிழ் ஊடகத்துறையில் தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறைகளையும் ஒடுக்குமுறைகளையும் வெளிக்கொண்டு வந்த ஊடகவியலாளர்கள் பலர் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். அதுபோன்று சுயாதீனமாக கருத்துக்களை வெளிக்கொண்டுவந்த சிங்கள, ஆங்கில ஊடகவியலாளர்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

குறிப்பாக, ஊடகவியலாளர்களான நிமலராஜன், ஐயாத்துரை நடேசன், தர்மரட்னம் சிவராம், சுப்பிரமணியம் சுகிர்தராஜன், செல்வராஜா ரஜீவர்மன், லசந்த விக்கிரமதுங்க, பரணிரூபசிங்கம் தேவகுமார், என சுதந்திர ஊடகத்துறையை காக்கவென அயராது உழைத்த எத்தனையோ பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள்.

அத்துடன் சுப்பிரமணியம் ராமச்சந்திரன், பிரகித் எக்னலிய கொட என எத்தனையோ ஊடகவியலாளர்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

### றிச்சட் டி சொய்சா படுகொலை :

சிறிலங்காவிலும்1990ம் ஆண்டு இன்ரர் பிறஸ் சேர்வீஸ் நிறுவனத்தின் ஊடகவியலாளன் ரிச்சேட் டி சொய்சா கடத்தப்பட்டு கொல்லப்பட்டதோடு இந்த நீண்ட கறைபடைந்த வரலாறு தொடர்ந்தது எனலாம். 28 ஏப்ரல் 1990 ஆம் ஆண்டு நிச்சட் டி சொய்சாவின் உடல் கண்டெடுக்கப்படுகிறது. அவரது உடலை அடையாளங்கண்டு கொண்டவர் தராகி என்ற தர்மரட்ணம் சிவராம் தமிழ் நெற் இணையத்தினுடய ஆசிரியரான இருந்தவர். பின்னர் 28 ஏப்பரல் 2005 அன்று சிவராம் கடத்தப்பட்டு கொல்லப்பட்டார்.

இந்தக் கொலைப்பட்டியல் பின்னர் நீண்டு அதிகரித்து வந்துள்ளது. தமிழ் ஊடகவியலாளர்கள் பலர் கொல்லப்பட்டுள்ளார்கள். உண்மைத்தகவல்களை வெளிக் கொண்டுவந்தார்கள் என்பதற்காக இவர்கள் கொலை செய்யப்பட்டார்கள்.

### நிமலராஜன் படுகொலை:

பல அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் யாழ்ப்பாணத்திலிருந்து செய்திகளை வழங்கி வந்த நிமலராஜன் கடந்த 2000 ஆண்டு அக்டோபர் 19ஆம் தேதி கொல்லப்பட்டார்.

ஈழப் போரின் மையப்புள்ளியாக இருந்த யாழ்ப்பாணத்திலிருந்து செய்திகளை வழங்கி கொண்டிருந்த மயில்வாகனம் நிமலராஜன் 22 வருடங்களுக்கு முன்பு அவரது வீட்டில் வைத்து கொலை செய்யப்பட்டார்.

கொடூரமான போரால் இலங்கையில் பதற்றமான சூழல் நிலவிக் கொண்டிருந்த வேளையில் பலத்த ஆபத்துகளுக்கு மத்தியில் தொடர்ந்து போர் குறித்தும், மனித உரிமை மீறல்கள் மற்றும் அரசியல் நிகழ்வுகள் குறித்தும் பிபிசி தமிழ் உட்பட பல ஊடகங்களுக்கு செய்திகளை வழங்கி கொண்டிருந்தவர் நிமலராஜன்.

### அச்சுறுத்தல் மிகுந்த பணி

நிமலராஜனுக்கு அச்சுறுத்தல்கள் வருவது ஒரு தொடர்கதையாக இருந்தது. ஆனால் அதையும் தாண்டி ஊடகவியலில் அவருக்கு இருந்த ஆர்வத்தால் அவர் தனது பணியை தொடர்ந்து செய்து வந்தார்.

யாழ்ப்பாணத்தில் கிட்டதட்ட எல்லாரையும் அவருக்கு தெரியும், அவருக்கும் அனைவரையும் தெரியும் என்கிறது அவர் இறப்பு குறித்து வெளியான பிபிசியின் இரங்கல் செய்தி.

நிமலராஜனின் ஊடகப்பணி என்பது கடுமையான பணியாகதான் இருந்தது. அந்த சமயத்தில் மின்சார இணைப்பும் இல்லை. அவர் சைக்கிளில் சென்றுதான் செய்திகளை சேகரித்து வந்தார். அந்த சமயத்தில் அவருக்கு ஆபத்துகளும் அதிகம் இருந்தன. பலதரப்பட்ட அரசியல் அச்சுறுத்தல்களும் இருந்தன.

### இருளில் நடந்த கொலை

போர்க்காலத்தில் இலங்கையில் நடைபெற்ற பொதுதேர்தலில் ஏற்பட்ட வன்முறைகள் குறித்து அவர் செய்தி வழங்கினார். அதில் தற்போது இலங்கையில் அரசியல் கட்சியாக இருக்கும் ஓர் கட்சி மோசடி செய்ததாகவும், மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

நிமலராஜன் கொல்லப்பட்ட அன்றும் பத்திரிகை செய்தி ஒன்றை எழுதி கொண்டிருந்தார். அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள் வீட்டிற்குள் புகுந்து நிமலராஜனை துப்பாக்கியால் சுட்டனர். நிமலராஜன் கொலை தொடர்பாக சில கைது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் இன்று வரை இந்த கொலை குற்றம் யார் மீதும் நிரூபிக்கப்படவில்லை.

### சமூக விடுதலைக்கான நடேசன் குரல் :

2004 மே 31ஆம் திகதி. நடேசன் படுகொலை செய்யப்பட்ட துயர நாள். தான் வாழ்ந்த சமூகத்தின் நீதிக்காக அரசியல் சமூக விடுதலைக்காக குரல் கொடுத்த பத்திரிகையாளன் ஒருவனுக்கு அதற்கு பரிசாக நடு வீதியில் சுட்டு வீழ்த்தப்பட்ட நாள்.

கிழக்கு பல்கலைக்கழக பொருளியல் துறை தலைவர் தம்பையாவின் படுகொலை பற்றி அந்த கொலை நடந்த அடுத்த ஞாயிறு தனியார் பத்திரிகை ஒன்றில் நடேசன் எழுதிய கட்டுரை வெளியாகியிருந்தது. மிக காரசாரமானதும் துணிச்சலோடு பல விடயங்களையும் சொல்லிய கட்டுரையாக அது அமைந்திருந்தது.

2004 மே மாதம் 31ஆம் திகதி காலை ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசன் தனது அலுவலகத்திற்கு செல்லும் வேளையில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பத்திரிகையாளர் மரணத்தை எதிர்பார்த்த வேளையிலும் பேனாவை கீழே வைப்பதற்கு மறுத்தவர் நடேசன்.

“நான் செத்தாலும் பரவாயில்லை. புற முதுகில் சூடுபட்டுச் சாகக் கூடாது. நெஞ்சில் குண்டு பாய்ந்து வித்தாக விதைக்கப்படுவதையே விரும்புகின்றேன்” என்பது நடேசனின் வாசகங்கள். நடேசனின் இந்த கருத்து நிதர்சனமானது என்பது தமிழ் பத்திரிகை உலகம் பின்னர் கண்ட உண்மை.

### சிவராமின் ஆங்கிலப் புலமை :

தமிழர்களின் போராட்டம் ஒரு நியாயமற்ற, காட்டுமிராண்டித்தனமான பயங்கரவாதம் எனச் சிங்கள மற்றும் ஆங்கில ஊடகங்கள் சிங்கள மக்களுக்குப் போதித்துக் கொண்டிருந்த காலகட்டத்தில் தமிழர்களின் போராட்ட நியாயத்தையும், அவர்களுக்கு உரிமைகள் வழங்கப்படுவதால் மாத்திரமே இலங்கைத் தீவில் அமைதி நிலவும் என்ற யதார்த்தத்தையும் தர்க்க நியாயங்களோடு சிங்களவர்களுக்கும் புரியக் கூடியவாறு சிவராம் ஆங்கிலத்தில விளக்கினார். சிவராமுடைய எழுத்தின் போக்கை மட்டுமன்றி அன்றைய காலகட்டத்தில் பணியாற்றிய பெரும்பாலான தமிழ் எழுத்தாளர்களின் போக்கையும் மாற்றியமைத்தது.

பத்திரிகைகளில் அவர் எழுதிய கட்டுரைகளுக்கு அப்பால் சிங்களத் தேசியம் பேசிய ஊடகவியலாளர்களுடனும் அவர் திரைமறைவில் தர்க்கிக்க வேண்டியிருந்தது. எவருமே துணிந்து செய்ய முன்வராத ஒரு காரியத்தை கொழும்பில் இருந்து கொண்டே செய்ய முன்வந்த சிவராமின் துணிச்சல் பாராட்டப்பட வேண்டியது.

சிவராம் பத்திரிகைகளில் முன்வைத்த கருத்துக்களுக்காக நேரில் கேள்வி எழுப்பப்பட்ட போதுகளில் அவற்றுக்கு அவர் ஆணித்தரமாகப் பதில் கூறவேண்டி ஏற்பட்டது.

தனது கருத்துக்களுக்காக சிங்கள ஊடகவியலாளர்களுடன் மோதவேண்டிய சூழல் உருவான போதிலும் அவர்களுடனான தொழில் முறை உறவை வளர்த்துக் கொள்ள சிவராம் தவறவில்லை.

அது மட்டுமன்றி சிங்களப் பேரினவாதத்தை எதிர்த்து நிற்கும் மாற்றின ஊடகவியலாளர்களுடனும் பல்வேறு தளங்களில் அவர் கரங் கோர்த்துக் கொண்டார்.

மறுபுறம், தமிழ் ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கிய பல பிரச்சினைகள் சிங்கள ஊடக அமைப்புக்களால் கண்டு கொள்ளாமல் விடப்பட்டபோது ‘இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம்’ என்ற அமைப்பை உருவாக்குவதில் முன்னோடியாக நின்றும் செயற்பட்டார். பின்னர் 28 ஏப்பரல் 2005 அன்று சிவராம் கடத்தப்பட்டு கொல்லப்பட்டார்.

### உதயன் மீதான தாக்குதல் :

2006இல் திருகோணமலையில் ஆறு மாணவர்களின் கொலையை வெளிப்படுத்தியதற்காக உதயன், சுடர் ஒளி நிருபர் சுப்பிரணியம் சுஜிதராஜ் கொல்லப்பட்டார்.

2006ம் ஆண்டு ஈழத்தின் மிகப்பெரும் ஊடகப்படுகொலையென வர்ணிக்கப்படுகின்ற உதயன் பத்திரிகை நிறுவனத்துக்குள் புகுந்த ஆயுததாரிகள் அங்கு பணியில் இருந்த இருவரை சுட்டக் கொன்றார்கள். இது ஊடக நிறுவனத்தக்குள் புகுந்து நடத்தப்பட்ட மிகப்பெரியதும் முக்கியமானதுமான தாக்குதலாகும்.

இதில் தாக்குதலை நடத்தியவர்கள் இலகுவாக கைது செய்யப்படுவதற்கு வாய்ப்புக்கள் இருந்த போதும் அது தொடர்பாக எவரொருவரும் கைது செய்யப்பட்வில்லை விசாரிக்கப்படவில்லை. இந்தக்காலகட்டத்தில் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டதான பல சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

### வன்னியின் குரல் சத்தியமூர்த்தி :

புலம்பெயர் வாழ் தமிழ் மக்களால் நன்கு அறியப்பட்ட வன்னியைச் சேர்ந்த அரசியல் ஆய்வாளரும் ஊடகவியலாளருமான புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தி முல்லைத்தீவு மாவட்டத்தில் இலங்கைப் படையினரின் எறிகணைத் தாக்குதலில் படுகாயமுற்று இறந்தார்.

ஊடகத்துறையில் 1990-களில் ஈடுபடத் தொடங்கிய இவர், ”வெளிச்சம்” சஞ்சிகை உள்ளிட்ட அச்சு ஊடகங்களில் கவிதைகள், சிறுகதைகளை எழுதி வந்தார். 1990-களின் பிற்பகுதியில் அரசியல் மற்றும் படைத்துறை ஊடகப் பணியில் ஈடுபட்டார். ஈழநாதத்தில் படைத்துறை பத்தியை எழுதி வந்த இவர், ஈழநாடு பத்திரிகையில் ஊடகவியலாளராக செயற்பட்டு அரசியல் படைத்துறை ஆய்வுகளையும் எழுதி வந்தார்.

2003 ஆம் ஆண்டு தொடக்கம் தாயகத்தில் இருந்து ஈழத்து நிலைமைகளை புலம்பெயர் ஊடகங்களுக்கு தொலைக்காட்சிகள், மற்றும் வானொலிகள் வழியாகவும் அச்சு ஊடகங்கள் வழியாகவும் இணைய ஊடகங்கள் வழியாகவும் வெளியிட்டு வந்தவர் சத்தியமூர்த்தி.

### நீதி மறுக்கப்பட்ட பத்திரிகையாளர்கள்:

அமெரிக்காவிலிருந்து பத்திரிகையாளர்களுக்காக செயல்படும் “கமிட்டி டு ப்ரொடக்ட் ஜர்னலிஸ்ட்ஸ்“ என்ற அமைப்பு இலங்கையில் 1992 ஆம் ஆண்டு காலத்திலிருந்து 2022ஆம் ஆண்டு காலம் வரை 25 பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டதாக தெரிவிக்கிறது.

ஆனால் இந்த எண்ணிக்கை 39க்கும் அதிகம் என்பதே உண்மையாகும்.

நிமலராஜனின் மரணத்திற்கு பிறகு வட கிழக்கு தமிழர் தாயக பகுதிகளில் மட்டும் 39க்கும் மேற்பட்ட ஊடக பணியாளர்கள் அல்லது ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் அல்லது காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

இந்த படுகொலை செய்யப்பட்ட அல்லது காணாமல் ஆக்கப்பட்ட ஊடக பணியாளர்கள் அல்லது ஊடகவியலாளர்கள் தொடர்பாக இதுவரை சொல்லிக் கொள்ளத் தக்க வகையில் இலங்கை சார்பாக எந்த விசாரணைகளும் முன்னெடுக்கப்படவில்லை என்பதே வரலாற்று உண்மையாகும்.

– ஐங்கரன் விக்கினேஸ்வரா–

தேசியம் www.thesiyamnews.com THESIYAM ජෙසියම්



# நாங்கள் நான்கு பேரும் இறந்திருக்க வேண்டியவர்கள்: முள்ளிவாய்க்காலிலிருந்து மீண்ட வைத்திய கலாநிதி சத்தியமூர்த்தி

தொகுப்பு:- செல்வநாயகம் ரவிசாந்

”நாங்கள் நான்கு பேரும் இறந்திருக்க வேண்டியவர்கள். ஆனால், கடவுள் தான் எங்களைக் காப்பாற்றியிருக்கின்றார்” என்பதை நான் அடிக்கடி நினைப்பதுண்டு என இறுதி யுத்தகாலப் பகுதியில் முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் மண்ணில் உயிரைத் துச்சமென மதித்து மருத்துவப் பணியாற்றி அதன் பின்னர் பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டு மீண்டு வந்து தற்போது யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையின் பணிப்பாளராகவுள்ள வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் இந்த ஆண்டின் தைமாதம் முதல் தொடர்ச்சியாக ஒவ்வொரு புதன்கிழமையும் இடம்பெற்று வந்த நூற்றாண்டு காலச் சிறப்புரை அரங்கத்தின் நிறைவு நாள் நிகழ்வு அண்மையில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் மேற்படி ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் தலைமையில் இடம்பெற்ற போது கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகையிலேயே மேற்கண்டவாறுதெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எனக்கு ஒரு அனுபவமிருக்கிறது. மே-15 ஆம் திகதி பிற்பகல்-02 மணிக்கு முள்ளிவாய்க்கால் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் வந்தது. அதுவரை என் கடமைகளை உரிய வகையில் செய்திருந்தேன். அன்று இரவு எங்களை பஸ்ஸில் ஏற்றினார்கள். முதல் 40 பேர் வரை பஸ்ஸில் ஏறி சீட்டில் இருந்திட்டம். பிறகு தான் தெரியும் அந்த பஸ்ஸில் 200 பேரை ஏற்றினார்கள் என்று. கால் வைக்க இடமில்லை. நான் என் சீற்றால் இறங்கிற்றேன். வேதனையால கத்தின ஆட்கள் பலபேர் இருந்தார்கள். ஒரு பதற்றமான சூழ்நிலையில் ஒருவரை ஒருவர் காப்பாற்ற மாட்டார்கள் என்பதைப் புரிந்து கொண்டு இன்னொருவருக்கு சீட் கொடுத்தேன். அடுத்தநாள் அதிகாலை-04 மணிக்கு எங்களைக் கொண்டு சென்று வவுனியா ஓமந்தையில் இறக்கினார்கள்.

நாங்கள் போய் இறங்கியவுடன் என்னையும், மூன்று வைத்தியர்களையும் இராணுவத்தினர் எங்களை விசாரித்தார்கள். எங்களை இராணுவத்தினர் ஒரு மரத்தின் கீழ் கொண்டு சென்று இருக்க விட்டார்கள். பாய் தாங்கோ என்று கேட்டோம். பாய் தரவில்லை. எனினும், முள்ளிவாய்க்காலிலிருந்து இறப்பு மற்றும் வேதனைகளை நேரடியாகப் பார்த்த எங்களுக்குப் பாய் தரவில்லை என்பது பெரிய பிரச்சினையாக இருக்கவில்லை. இந்நிலையில் பெரிய மலிபன் பிஸ்கட் பெட்டிகளின் மேல் நாங்கள் உறங்கினோம். அன்றைய தினம் அதிகாலை-05 மணிக்கு நித்திரை கொண்ட எம்மைக் காலை-07 மணிக்கு எழுப்பினார்கள்.

முதலாவதாக எம்மை நோக்கி வந்த இராணுவ அதிகாரியிடம் நான் ஒரு அரசாங்க வைத்தியர். என்னால் இயன்றவரை மக்களுக்கு மருத்துவம் செய்தனான் என்று கூறினேன். உடனே, அவர் என்னைப் பார்த்துக் கொண்ட கோபமும், என்னைத் திட்டித் தீர்த்த விதமும் எனக்குச் சிறியளவில் பயம், பதற்றத்தைக் கொண்டு வந்தாலும் நான் பெருமளவில் பயப்படவில்லை.

இரண்டாவது அதிகாரி கைகாட்டிக் கூப்பிட்டார். அவரிடம் செல்லும் போது ஒரு பிளாஸ்ரிக் கதிரையைக் கொண்டு வருமாறு கூறினார். அவர் பிளாஸ்ரிக் கதிரையின் மேலிருந்தார். என்னைக் கீழே இருக்கச் சொன்னார். கீழே இருந்த பின் என்னைகிச் சப்பாணி கட்டி, இரண்டு கைகளையும் கட்டி இருக்கச் சொல்லி விசாரித்தார். அவர் என்னிடம் இவ்வளவு எதிர்பார்க்கிறார் என்பதைப் புரிந்து கொண்டு நானும் செயற்பட்டேன். அதன் பின்னர் மூன்றாவது அதிகாரியும் என்னிடம் விசாரித்தார். அவர்களிடம் நான் ஒரு வைத்தியர் என்பதை விளங்கப்படுத்தியும் பயனளிக்கவில்லை.

நான்காவது அதிகாரி என்னிடம் விசாரித்த போது நான் இவ்வளவு காலமும் செய்தது பெரிய பிழை. இப்ப உங்களைக் கண்ட பிறகு தான் எனக்குத் தெரிகிறது இது தான் உண்மையான உலகம் எனத் தெரிவித்தேன். அப்போது அவர் You are come to the point (சபையில் சிரிப்பொலி) என்று கூறினார். மூன்று பேருடன் கதைத்த பின்னர் நான்காவது நபருடன் எப்படிக் கதைப்பது என்பதை நாமே கற்றுக் கொள்ள வேண்டும். இதனையே நான் அந்தச் சந்தர்ப்பத்தில் செய்தேன்.

அன்று இரவு கொண்டு சென்று என்னையும், சில வைத்தியர்களையும் முதல் தடவையாக வவுனியாவில் ஒரு சிறைச்சாலையில் சிறை வைத்தார்கள். அப்போது எங்களுக்குள் பயம், பதற்றம் என்பன இருந்தன. வைத்தியர் வரதராஜன் யன்னலுக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்தவாறு நான் கம்பி எண்ணப் போகிறேன் என்று சொன்னார்.

நாங்கள் நான்கு பேரும் இறந்திருக்க வேண்டியவர்கள். ஆனால், கடவுள் தான் எங்களைக் காப்பாற்றியிருக்கின்றார் என்பதை நான் அடிக்கடி நினைப்பதுண்டு.

அடுத்தநாள் இரவு சிறைச்சாலையிலிருந்து ஏற்றி எங்கள் நால்வரையும் விசாரணைகளுக்காக நான்காம் மாடி நோக்கிக் கொண்டு சென்றார்கள். அப்போது நாங்கள் போய்ச் சேருவோமா? இல்லையா? என்ற பயம் எமக்குள்ளிருந்தது. மணிக்கூடு, மோதிரம் எல்லாவற்றையும் கழற்றிக் கொடுத்துவிட்டு சென்ற எம்மை அதிகாலை-05 மணிக்கு அங்குள்ள சிறைச்சாலையில் கொண்டு சென்று விட்டார்கள். அதன் பின்னர் அங்கிருந்த கைதிகளுடன் நாங்களும் ஒருவராகி விட்டோம். அங்கு பெர்னாண்டோ என்ற கைதியுமிருந்தார்.

முதலாம் நாள் இருந்தோம். இரண்டாம் நாள் ஒரு சுவாமிப்படத்தை எடுத்துக் கும்பிடத் தொடங்கினோம். விவேகானந்த என்ற திருகோணமலையைச் சேர்ந்த பொறியியலாளரும் அங்கிருந்தார். நாங்கள் சேர்ந்து பஞ்சபுராணம் பாடினோம். அடுத்தநாள் அங்கிருந்த முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்களும் பஜனை செய்யத் தொடங்கினார்கள். அதன் பின்னர் காலை வேளையில் நான்கு மதத்தைச் சேந்தவர்களினதும் பஜனை நடக்கும். அதன் பின்னர் தான் சாப்பாடு.

4ம் மாடியிலிருந்த போது நேரத்திற்கு எழும்ப வேண்டும். காலை-07 மணிக்கும் காலை-08 மணிக்குமிடையில் எங்கள் பிரார்த்தனைகளை முடித்துக் கோலம். காலை-08 மணிக்குத் தேசிய கீதம் பாடப்படும். காலை-08.15 மணிக்குச் சாப்பிடுவோம். அளவுச் சாப்பாடு. ஒரு சின்னப் பக்கற் தான் சாப்பாடு வரும்.

அடுத்த கிழமை இருந்தவாறே எப்படித் துள்ளுவது? உடற்பயிற்சிகள் செய்வது என்பதை அங்கு பழகிக் கொண்டோம். அதன்பின்னர் நாங்கள் ஒருவாறு அனுமதி எடுத்து செஞ்சிலுவைச் சங்கம் ஊடாகப் பேப்பர் எடுத்தோம். தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிப் பத்திரிகைகளும் எடுத்து அங்குள்ள சிங்களக் கைதிகளுக்கும் வாசிக்கக் கொடுத்தோம்.

நான்காம் மாடியில் நாங்கள் மூன்றரை மாதம் வரை சிறைப்படுத்தப்பட்டிருந்த போதிலும் கையடக்கத் தொலைபேசியில்லை, அளவுச் சாப்பாடு, உடற்பயிற்சி, வாசிப்புப் பழக்கம் எனப் பல விடயங்களை அங்கு கற்றுக் கொண்டோம். ஒருநாளில் கடினமான விடயமொன்றைப் பயமில்லாமல் நேர்சிந்தனையுடன் அணுகினால் எல்லாச் செயற்பாடுகளும் இலகுவாக அமையும் என்றார்.





# வடக்கு கிழக்கில் இராணுவ அதிகரிப்பு.. போதைப்பொருள் கடத்தலும் அதிகரிப்பு...

- கலாநிதி பாக்கியசோதி சரவண முத்து -

வடக்கு கிழக்கு மாகாணங்களில் இராணுவ அதிகரிப்பு குறைக்கப்படாத நிலையில் போதை பொருள் கடத்தலும் அங்கு தான் அதிகரித்துள்ளனர் மாற்றுக் கொள்கைக்கான மத்திய நிலையத்தில் நிறைவேற்று பணிப்பாளர் பாக்கிய சோதி சரவணமுத்து தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை அனுராதபுரத்தில் மாற்றுக் கொள்கைக்கைகளுக்கான மத்திய நிலையமும் யுஎன்டிபி நிறுவனமும் இணைந்து இலங்கையில் உள்ள தெரிவு செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் மற்றும் சிவில் செயற்பாட்டாளர்களுடனான செயல் அமர்வு ஒன்றில் கருத்து தெரிவிக்கும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் உள்நாட்டு யுத்தம் நிறைவடைந்த பின்னரும் வரவு செலவுத் திட்டத்தில் இராணுவ செலவுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்ச்சியாக அதிகரிக்கப்பட்டுவருகிறது.

வடக்கு கிழக்கு மாகாணங்கள் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மாகாணங்களாக உள்ள நிலையில் அப்பகுதியில் இராணுவத்தினரின் இருப்பு தொடர்ந்தும் அதிகரித்து வரும் நிலையே காணப்படுகிறது.

அது மட்டுமல்லாது வடக்கு கிழக்கு மாகாணங்கள் ஊடாக நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு போதைப் பொருள் கடத்தல் இடம்பெறுவதாக பல குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

நாட்டில் இருபது மில்லியன் மக்கள் வாழ்ந்து வரும் நிலையில் 15 இலட்சம் அரச உத்தியோகத்தர்கள் அரச சேவையில் உள்ளனர்.

ஐஎம்எப் இன் கோரிக்கைக்கு இணங்க அரச சேவையில் உள்ளவர்களை குறைப்பதற்கான நடவடிக்கைகள் இடம் பெற்று வரும் நிலையில் இராணுவத்துக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டு வருகிறது.

வடக்கு கிழக்கில் வாழும் மக்கள் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட நிலையில் அவர்களை மீண்டும் சமூகத்துக்கு இணைக்கும் பாரிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உள்ளது.

குறிப்பாக கிழக்கு மாகாணத்தை எடுத்துக் கொண்டால் அதிகமான பிரச்சனைகளை கொண்ட மாகாணமாக காணப்படும் நிலையில் அரசாங்கம் அவற்றுக்கான தீர்வுகளை முன் வைப்பதில் பின்னடித்து வருகிறது.

ஆகவே வடக்கு கிழக்கு மாகாணங்களில் இராணுவ அதிகரிப்பு இடம்பெறும் நிலையில் போதைப் பொருள் கடத்தல் களும் அங்கு தான் இடம்பெறுகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

# சமூக சேவையில் ஈடுபட்ட இளைஞர் கைது!



பருத்தித்துறையிலுள்ள இராணுவ முகாமிற்கு அருகாமையில் வைத்து இளைஞர் ஒருவர் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

பருத்தித்துறையை சேர்ந்த ந. கிருஷாந் (வயது 25) என்பவரே கைதுசெய்யப்பட்டவர் ஆவார். இவர் யுத்தத்தின் போது உடல் ஊனமுற்ற முன்னாள் போராளிகள் மற்றும் அவர்களின் குடும்பங்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கான தொண்டுப்பணிகளில் ஈடுபட்டுவந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தமக்கு கிடத்த தகவல் அடிப்படையில் விசாரணைக்கு என கடந்த திங்களன்று பொலிசாரால் அழைத்துச்செல்லப்பட்டார். இதனை தொடர்ந்து, அவரது குடும்பத்தினரின் கோரிக்கையின் படி அடிப்படை உரிமைகளுக்கான மற்றும் ஏனைய உரிமைகளிக்குமான அமைப்பின் தலையீட்டின் பின்னர், கடந்த வியாழன் அன்று (16.11.2023) பொலிசார் அவரை தாம் கைது செய்ததாக தெரிவித்து உரிய ஆவணத்தை வழங்கியுள்ளனர்.



# தமிழர் தேசத்தின் அடையாளம் கார்த்திகைப் பூ!

## செங்காந்தள் மலர் தமிழ்நாட்டின் மாநில மலர் !!

பண்டைய தமிழ் மன்னர்கள் தமது இராட்சியங்களுக்கு தனித்தனியான மலர்களைக் கொண்டிருந்தனர் என்பது வரலாற்றிலிருந்து அறியக்கூடியதாக உள்ளது.

**கார்த்திகைப் பூவின் வரலாற்றுப் பாரம்பரியம்:**

சோழருக்கு அத்திப் பூவும், சேரருக்கு பனம் பூவும், பாண்டியர்க்கு வேப்பம் பூவும் தேசிய மலர்களாக இருந்ததுள்ளன. மேற்குறிப்பிட்ட பூக்களின் மாலைகளையே அவர்கள் களமுனைகளுக்கு செல்லும் போது அணிந்து சென்றதாக வரலாறு கூறுகின்றன.

இங்கே காந்தள் என்பது கார்த்திகைப் பூவின் பாரம்பரியத் தமிழ்ப் பெயராகும். இவ்வரலாற்றுச் சான்றாதாரத்தினூடாக கார்த்திகை மலருக்கும் தமிழர் வரலாற்றுக்கும் உள்ள தொடர்பு உள்ளங்கை நெல்லிக்கனியாகத் தெட்டத்தெளிவாகின்றது.

தேசத்தோடு மாத்திரமின்றி தேசத்தில் வாழுகின்ற மக்களின் நம்பிக்கைளிலும் பூக்கள் பங்கு வகிக்கின்றன.

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு உள்ளிட்ட சங்க இலக்கியங்களிலும் செங்காந்தள் மலர் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளன. அத்தகைய சிறப்புமிக்க மலர்தான் தமிழ்நாட்டின் மாநில மலராகப் போற்றப்படுகிறது.

**தமிழ்நாட்டின் மாநில மலராக செங்காந்தள் :**

செங்காந்தள், காந்தள் அல்லது கார்த்திகைப் பூ என்ற பெயர்களில் அழைக்கப்படுகின்றன. ஆப்பிரிக்கா, ஆசியா கண்டங்களில் காணப்படும் இந்த மலர் தமிழ்நாட்டின் மாநில மலராகத் திகழ்வது மிகவும் சிறப்புக்குரியது.

இம் மலர் `Gloriosa Superba' என்ற தாவரவியல் பெயரைக்கொண்டது. செங்காந்தள் மலர்ச் செடியின் அனைத்துப் பாகங்களிலும் ஹகோல்ச்சிசின்' (Colchicine) என்ற அல்கலாய்டுகள் அதிகமாகக் காணப்படுகின்றன.

கார்த்திகை மாதத்தில் பூக்கும் இந்தப்பூ வேலிகளில் மட்டுமல்ல சாலையோரங்கள் மற்றும் காடுகளிலும் படர்ந்து வளரக்கூடியது. குறிப்பாக, மலைகள் மற்றும் சரிவுகளில் காணப்படும் இந்த மலர் அழகிய விரல்களைப் போலவும், சுடர்கள்போலவும் காட்சியளிக்கும்.

காந்தள் மலராக மலர்ச் செடியின் வேர்ப் பகுதியை 'கண்வலிக்கிழங்கு', 'கலப்பைக்கிழங்கு', 'வெண்தோன்றிக்கிழங்கு', 'கார்த்திகைக்கிழங்கு' என்றும் அழைக்கிறார்கள்.

செங்காந்தள் செடியின் கிழங்கிலிருந்துதான் புதிய கொடிகள் கிளைவிட்டுப் படரும். செடி வகையான இது, கொடிபோல் படரக்கூடியது. இலைகளின் நுனி நீண்டும் சுருண்டும் பற்றுக்கம்பிகள் போல அருகில் உள்ள மரம், செடி போன்றவற்றைப் பற்றிப் பிடித்து வளரக்கூடியது. இதன் இலைகளுக்கு காம்பு கிடையாது. ஆனால், கிழங்கின் ஒவ்வொரு பகுதியின் முனையிலும் புதிய கணு முளைக்கும்.

இதன் பூக்கள் பெரியவை. முதலில் பச்சை நிறத்துடன் பூக்கும் இந்த மலர் பிறகு வெண்மை கலந்த மஞ்சள், பிறகு மஞ்சள், செம்மஞ்சள், சிவப்பு, நீலம் கலந்த சிவப்பு என நிறம் மாறிக்கொண்டே போகும்.

**கார்த்திகை பூ தமிழரை காத்தவர்களின் பூ !**

தீ கொழுந்துவிட்டு எரிவதுபோலக் காணப்படும் செங்காந்தள் பூவை ஹஅக்னிசலம்' என்றும் சொல்வார்கள். கிழங்கு கலப்பையைப்போன்ற தோற்றத்துடன் காணப்படுவதால், அதை 'கலப்பை' என்றும், ஹஇலாங்கிலி' என்றும் சொல்வார்கள்.

இலைகளின் நுனி சுருண்டு காணப்படுவதால், 'தலைச்சுருளி' என்பார்கள். மற்ற தாவரங்களைப் பற்றிக்கொண்டு வளர்வதால் ஹபற்றி' என்றும் சொல்வார்கள். வளைந்து பற்றிக்கொள்வதால், 'கோடல்', ஹகோடை' என்று அழைக்கப்படுகிறது. கார்த்திகை மாதத்தில் பூ பூப்பதால் 'கார்த்திகைப்பூ' எனப்படுகிறது.

மழைக்காலத்தில் வனப்புடன் காணப்படுவதால், 'தோன்றி' என்றும் நாட்டு மருத்துவத்தில் 'வெண்தோண்டி' என்று அழைப்பார்கள். இதன் பூக்களின் நிறம் வேறுபடுவதால், 'வெண்காந்தள்' என்றும், 'செங்காந்தள்' என்றும் வர்ணிக்கிறார்கள். கிழங்கு பிரிந்து கணுக்கள் காணப்படுவதை, 'ஆண்காந்தள்' என்றும் கணுக்கள் இல்லாததை 'பெண்காந்தள்' என்றும் சொல்வார்கள்.

**தேனீக்களும் வட்டமிடும் காந்தள் மலர் :**

செங்காந்தள் மலரில் தேன் அதிகமாகக் காணப்படுவதால், எப்போதும் வண்டுகளும் தேனீக்களும் வட்டமிட்டுக்கொண்டிருக்குமாம். பொதுவாக, மலர்கள் அனைத்துமே பூத்து உதிரக்கூடியவை.

ஆனால், செங்காந்தள் மலர் மட்டும் வாடினாலும் உதிர்வதில்லை. இந்தப் பூவை உற்றுப்பார்த்தால், கண்வலி வரும் என்று சொல்கிறார்கள், அதனால் இதை 'கண்வலிப்பூ' என்றும் கிராப்புறங்களில் அழைக்கிறார்கள்.

இத்தகைய சிறப்புவாய்ந்த வரலாறுகளைக் கொண்ட செங்காந்தள் மலர் புற்றுநோய்க்கு நல்லதொரு மருந்தாகச் செயல்படுகிறது என்று கூறப்படுகிறது. குறிப்பாக, புற்றுநோய் பரவாமல் தடுக்கும் கால்சிசின் (colchicine) செங்காந்தளின் விதை, கிழங்கில் அதிகமாக உள்ளது.

இதற்காக செங்காந்தள் செடியின் விதையை அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவைச் சேர்ந்த மருந்து நிறுவனங்கள் அதிக அளவில் வாங்கிச் செல்கின்றன எனவும் அறியப்படுகிறது.

**மருந்தாக பயன்படும் செங்காந்தள் :**

செங்காந்தள் பாம்புக்கடி, தேள்கடி போன்றவற்றுக்கு மருந்தாகப் பயன்படுகிறது. பாம்பு கடித்தவர்கள் இந்தச் செடியின் வேருடன் குப்பை மேனி வேர், நீலி வேர் சேர்த்து அரைத்து, அரை நெல்லிக்காய் அளவு தினமும் காலை, மாலை என மூன்று நாள்கள் சாப்பிட்டு வந்தால், விஷம் இறங்கும் என தமிழ்நாட்டில் கிராமிய வைத்தியர்கள் நம்புகின்றனர்.

உப்பில்லா பத்தியம் அவசியம். சிறிய பாம்புகள் கடித்தாலோ, வண்டு கடித்தாலோ இதன் இலையை அரைத்துப் பூசி சீயக்காய் தேய்த்துக் குளித்தால் விஷம் இறங்கிவிடும்.

செங்காந்தள் வேரில் செய்யப்பட்ட தைலத்தை வாரம் ஒருநாள் தலையில் தேய்த்துக் குளித்து வந்தால் எலி, வண்டு, பூரான், சாரைப்பாம்பு கடிபட்டவர்களுக்கு விஷத்தன்மை குறைந்துவிடும்.

மேலும், இந்தத் தைலத்தை மேகநோய், சொறி, சிரங்கு, படை உள்ளவர்கள் குளித்து வந்தால் நோய் குணமாகும். இத்தகைய சூழலில் புளி, புகைப்பிடித்தல், போதைப்பொருள் பயன்படுத்தக் கூடாது.

வாதநோய், மூட்டுவலி, தொழுநோயைக் குணப்படுத்துவதுடன் பால்வினை நோய், வெண்குஷ்டம் போன்றவற்றைக் குணப்படுத்தவும் இது பயன்படுகிறது. பிரசவவலியைத் தூண்டும் நல்ல மருந்தாகவும் இது செயல்படுகிறது.

**மகத்தான மருத்துவப் பலன்கள் :**

பிரசவத்தின்போது நஞ்சுக்கொடி இறங்காமல் அவதிப்படும் பெண்களுக்கு பச்சை செங்காந்தள் வேர்க்கிழங்கை அரைத்து தொப்புள், அடிவயிறு, உள்ளங்கை, உள்ளங்கால் போன்ற இடங்களில் தடவுவார்கள். உடனடியாக நஞ்சுக்கொடி இறங்கிவிட பச்சைச் செங்காந்தள் கிழங்கை சிறு துண்டுகளாக நறுக்கி அது மூழ்குமளவு வேப்பெண்ணெய் ஊற்றிக் காய்ச்ச வேண்டும். கிழங்குகள் மேலே மிதக்கும்போது அடுப்பிலிருந்து இறக்கி, ஆற வைத்து, பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டும்.

பாரிசவாயு, தலைவலி, கழுத்து நரம்புவலி போன்றவற்றுக்கு இந்த எண்ணெயைத் தேய்த்துவந்தால், குணம் கிடைக்கும். மேலும் தலைப்பேன்களை ஒழிக்கும் மருந்தாகவும் பயன்படுத்தப்படுகிறது.

செங்காந்தள் செடியின் கிழங்கு ஆயுர்வேதம் மற்றும் யுனானி மருந்துகளில் பல்வேறு விதமாகப் பயன்படுத்தப்படுகிறது.

**தமிழர் தேசத்தின் அடையாளம் கார்த்திகைப் பூ:**

தமிழர் தேசியத்தின், தமிழர் தேசத்தின் அடையாளச் சின்னமாக பூக்கள் விளங்குவது யாவரும் அறிந்ததே. பூக்கள் அந்தந்த தேசியத்தினதும், தேசத்தினதும் வரலாற்று சமூக பண்பாட்டின் பால் பின்னிப்பிணைந்து உள்ளதை நாம் காணலாம்.

ஒவ்வொரு நாட்டினதும் தொடர்புபட்டுள்ள மலர்கள் தேசியப் பூக்களாக பிரகடனப்படுத்தப்பட்டு அந்தந்த தேசியங்களால் கௌரவிக்கப்படுவதும், தேசியக்கொடிக்கு சமமாக பேணப்படுவதும், தொன்றுதொட்டு நிலவிவரும் மரபு.

தழிழர்களின் தேசியப்பூவாக, தமிழீழத்தின் தேசியப் பூவாக கார்காலத்தில் மலர்ந்திடுவதும், தமிழீழ தேசியக்கொடியின் வர்ணங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

தமிழீழத் தேசியத் நாளாம் மாவீரர் நாள் வருகின்ற நாட்களில் கொடிபரப்பி பூத்துக் குலுங்குவதும், தமிழீழ தேசமெங்ஙனம் பரவி முகிழ் விடுவதுமான காந்தாள் (கார்த்திகை) பூ பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

**தேச நம்பிக்கைளின் பூக்கள்:**

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பங்குபற்றி தாய்நாட்டுக்காக தமது உயிரை ஈந்த தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்களையும், அவர்களோடு சேர்ந்து போரிட்டு உயிர் ஈந்த எல்லைப்படை துணைப்படை வீரர்களையும், புலிகளோடு இணைந்து உயிர் ஈந்த ஈழ புரட்சி இயக்க (ஈரோஸ்) உறுப்பினர்களையும், மற்றும் குட்டிமணி, தங்கத்துரை போன்ற வேறு பல ஈழப்போராட்ட போராளிகளையும் நினைவுகூர்ந்து அஞ்சலி செய்து, பெருமைப்படுத்தும் நாள் மாவீரர் நாளாகும்.

இதற்குரிய நாளாக நவம்பர் 27 ஆம் நாள் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பினரால் 1989 ஆண்டில் அறிவிக்கப்பட்டது. சர்வதேச ரீதியில் நினைவுகூரும் நாள் போன்று மற்ற நாடுகளில் போர்வீரர்களை நினைவு கூரும் நாட்களோடு தமிழீழ மாவீரர் நாள் ஒப்பிடத்தக்கது.

ஈழத்தமிழர் அனேகர் வெவ்வேறு அரசியல் நிலைப்பாடுகளைக் கொண்டிருந்தாலும், ஈழப் போராட்டத்தில் மடிந்த வீரர்களுக்கு மரியாதை செய்வர்.

ஈழப் போரில் இறந்த போராளிகளை நினைவு கூருவது, மதிப்பது தமது அடிப்படைக் கடமைகளில், கொள்கைகளில் ஒன்றாகக் தமிழ் மக்கள் கருதுகிறார்கள். முதன் முதலில் மாவீரர் நாளாக நவம்பர் 27 விடுதலைப் புலிகளால் 1989 அறிவிக்கப்பட்டது.

> **“எத்தகைய அடக்குமுறை வந்தபோதும், ஆலயங்களில் மணி ஒலிப்பதோ, தீபம் ஏற்றுவதோ தடைசெய்யப்பட்ட போதும் மாவீரர் நாளில் கார்திகை மலர்கள் இதழ்களை விரித்து மாவீரர்களை அஞ்சலிக்க தவறவில்லை. தமிழரின் இதய அஞ்சலியை துப்பாக்கி முனையில் அதிகாரம் தடுத்து நிறுத்தினாலும், இயற்கையாக, கார்த்திகைப் பூ வடிவில் மாவீரர் நாளினை நினைவேந்துவதை யாராலும் அடக்க முடியவில்லை”**

தமிழீழ மாவீரர் நாளாக இந்நாளைத் தேர்ந்தெடுத்ததற்கு தமிழீழ போராட்ட வரலாற்றுடன் இணைந்த ஒரு முக்கிய காரணம் உள்ளது. இந்த நாளில்தான் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் முதலாவது போராளியான சங்கர் (செ. சத்தியநாதன்) வீரமரணம் அடைந்தார்.

**மாவீரர் நாள் அடையாளமாக கார்த்திகை பூ:**

உலக அரங்கில் ஈழத் தமிழினத்தின் குறியீடாக, வேறு எந்தப்பூவை விடவும் பொருத்தமான தேர்வாகக் கார்த்திகைப்பூ சிறப்புப் பெற்றுள்ளது. ஆனால் கார்த்திகை பூ சொல்லும் செய்தியை, அது கமழும் தேசிய வாசத்தை நுகர்வதற்குப் பேரினவாதம் தயாராக இல்லை.

இலங்கைத் தீவின் ஒரே ஒரு பூ நீலோற்பலம் தான் என்று அதன் நாசி வழிகள் எங்கும் நீலோற்பலத்தால் அடைத்து வைத்திருக்கிறது. இயற்கை, அதன் பரிணாமப் பாதைக்குக் குறுக்காக நிற்கும் எதனையும் தூக்கி எறிந்து தன் பல்லினத்துவத்தை நிலைநிறுத்தும் பேராற்றல் பெற்றது என்பதை வரலாறு பூராவும் நிரூபித்தே வந்துள்ளது.

கார்த்திகைப்பூவும் கார்த்திகைக் கனவுகளும் ஈழத்தமிழர்களினதும் புலம்பெயர் தமிழர்களினதும் வாழ்வில் மறக்கமுடியாத நாளாக கார்திகை 27 ம் திகதி காணப்படுகிறது.

மக்களுக்காகவும் மண்ணுக்காகவும் தம் உயிர்களை ஆயுதமாக்கி போராடி மடிந்த மாவீரர்களை நினைவேந்தும் நாள் மாவீரர் நாளுக்கென்றே பிறந்தாற்போல் இந்தமாதத்திலேயே கார்திகைப்பூக்களும் மலரும்.

**மாவீரர்களை அஞ்சலிக்கும பூ:**

தமிழீழத்தை அடையாளப்படுத்தும் சிகப்பு மஞ்சள் வர்ணங்களோடும் மாவீரர் நாளில் ஏற்றப்படும் சுடரைப் போன்ற தோற்றத்துடனும் கார்திகை மலர்கள் எவருக்கும் சொல்லாமலேயே மாவீரர்களை நினைவூட்டும்.

2009இல் போர் மௌனித்த பின்னரும், எத்தகைய அடக்குமுறை வந்தபோதும் - மாவீரர் நாளில் ஆலயங்களில் மணி ஒலிப்பதோ, தீபம் ஏற்றுவதோ தடைசெய்யப்பட்ட போதும் கார்திகை மலர்கள் இதழ்களை விரித்து மாவீரர்களை அஞ்சலிக்க தவறவில்லை. தமிழர்களின் அஞ்சலியை துப்பாக்கி முனையில் அதிகாரம் தடுத்து நிறுத்தினாலும் இயற்கை கார்த்திகைப் பூ வடிவில் மாவீரர் நாளினை நினைவேந்துவதை யாராலும் அடக்க முடியவில்லை.

- நவீனன் -

# மாவீரர்களின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டு மாவீரர்களின் பெற்றோர்கள், மற்றும் முன்னாள் போராளிகளின் பங்கேற்புடன் யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்பட்டது.



மாவீரர்களின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டு மாவீரர்களின் பெற்றோர்கள், மற்றும் முன்னாள் போராளிகளின் பங்கேற்புடன் யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்பட்டது.

ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தில் தமது இன்னுயிரை தியாகம் செய்த போராளிகளை நினைவு கூரும் மாவீரர் வாரம் கடந்த செவ்வாய்க்கிழமை (21) ஆரம்பமாகியுள்ளது.

இதனையொட்டி யாழ்ப்பாணம் நல்லூரிலுள்ள தியாக தீபம் திலீபனின் நினைவாலயத்திற்கு முன்பாக அமைக்கப்பட்ட மாவீரர்களின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டு செவ்வாய்க்கிழமை மாலை 6 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது. இதன்பொழுது பொதுச்சுடரினை மூன்று மாவீரர்களின் தாயாரான சிவபாதம் இந்திரவதி ஏற்றிவைத்து மலரஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன் யாழ் மாநகர முன்னாள் முதல்வரும் சட்டத்தரணியுமான வி.மணிவண்ணன் மலரஞ்சலி செலுத்தினர்.

தொடர்ச்சியாக சிறுவர் சிறுமியர்களால் மாவீரர்களின் பெயர் பொறிக்கப்பட்ட கல்லறை திரைநீக்கம் செய்யபட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

1982 கார்த்திகை 27 முதல் 2009 வைகாசி 18 வரையான காலப்பகுதியில் தாய் மண்ணின் விடியலுக்காய் வித்தாகியவர்களில் கிடைக்கபெற முடிந்த 24,379 வீரர்களின் பெயர்களினை உள்ளடக்கிய கல்லறைகளையும் சில தகவல்களையும் உள்ளடக்கி நினைவாலயம் உருவாக்கப்பட்டுள்ளது.

மாவீரர்களின் பெற்றோர், முன்னாள் போராளிகள், சிறுவர்கள், முன்னாள் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



மாவீரர் வாரத்தின் தொடக்க நாள் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை(21) மாலை 4.00 மணிக்கு வடமராட்சி பகுதியில் அனுஷ்டிக்கப்பட்டது. மாலு சந்தி தோட்டப் பகுதியில் பிரத்தியேக மாக அமைக்கப்பட்ட இடத்தில் பொதுச் சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மூன்று மாவீரர்களின் தாயார் பொதுச்சுடர் என்று ஏற்றியதை தொடர்ந்து அஞ்சலி நிகழ்வு இடம் பெற்றது. இந்நிகழ்வில் மாவீரர்களது பெற்றோர்,தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரும் கலந்து கொண்டனர்.

# மாவீரம் தமிழ்த் தேசியத்தை உயிர்ப்புடன் பாதுகாக்கின்றது!

## வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ்



விடுதலைப் போராட்டத்தின் எழுச்சியும் அதன் தலைமைத்துவத்தின் அர்ப்பணிப்பும் மாவீரம் என்னும் விலைமதிப்பிட முடியாத தியாகத்தை தமிழின விடுதலைக்காக விதையாக்கியுள்ளது.

இன்று தமிழ்த் தேசியம் உயிர்ப்புடன் இருக்கிறது என்றால் அது மாவீரர்களின் தியாகத்தினால் தான் என்பதை எவரும் மறுக்க முடியாது.

சிங்கள பேரினவாதம் சிங்கள பௌத்த மேலாதிக்க சிந்தனையில் தமிழ்த் தேசியத்தை சிதைத்துவிட வேண்டும் என்று பல்வேறு கோணங்களில் தமிழ்த் தேசிய அடையாளங்களை கபளீகரம் செய்ய வேண்டும் என கங்கணம் கட்டி நிக்கும் போது தமிழர் தாயகத்தில் அரச எடுபடிகள் மாவீரர் தியாகத்தை கொச்சைப்படுத்தும் போது வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ்த் தேசியம் பேசும் அரசியல் கட்சிகள் பெரும் பாண்மைப் பலத்தை தம்வசப்படுத்துகின்றன என்றால் அது மாவீரர்களின் தியாகம் என்றால் மிகையாகாது ஈழத் தமிழ் மக்களின் மனங்களில் நீறு கொண்ட நெருப்பாக தமிழ்த் தேசியம் இருக்கிறது என்பதை மாவீரர் எழுச்சி நாட்களின் உணர்வு வெளிப்பாடு சுட்டிக் காட்டுகிறது.

தடைகள் என்பது ஈழத் தமிழர்களுக்கு புதியதல்ல சிங்கள ஆட்சியாளர்களும் அதன் இயந்திரமும் நினைவேந்தலுக்கு எத் தடை போட்டாலும் அதனையும் தாண்டி எழுச்சி கொள்கிறது என்றால் மாவீரரின் ஒப்பற்ற தியாகமும் லட்சக்கணக்கான பொது மக்களின் அர்ப்பணிப்புமே காரணம்.

வேறுபாடுகளை விட்டு எல்லோரும் தாயகம் எங்கும் எழுச்சி கொள்வோமாக இருந்தால் அதுவே தமிழர்களின் அரசியல் விடுதலைக்கு மாவீரர்களின் தியாகத்திற்கும் வலுச் சேர்க்கும்.

# கிளிநொச்சி பாரதிபுரத்தில் மாவீரர் பெற்றோர் மதிப்பளிக்கும் நிகழ்வும், அஞ்சலியும்



மாவீரர் பெற்றோர் மதிப்பளிக்கும் நிகழ்வும், அஞ்சலியும் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டது. கிளிநொச்சி பாரதிபுரம், பொன்னகர் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள மாவீரர்களின் பெற்றோர் அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

பொதுச்சுடர் ஏற்றப்பட்டு, மெழுகுதிரி ஏந்தி அஞ்சலிக்கப்பட்டதுடன், பொது உருவப் படத்துக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டது. தொடர்ந்து மலர் அஞ்சலி இடம்பெற்றதுடன், அஞ்சலி உரைகளும் இடம்பெற்றன.




1990 ஆம் ஆண்டு இரண்டாவது தமிழீழத் தேசிய மாவீரர் நாளையொட்டி நமது தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களால் அறிமுகம் செய்யப்பட்டு, நவம்பர் மாதம் 21 ஆம் நாள் முதன்முதலில் தமிழீழத் தேசியக் கொடி தேசியத் தலைவர் அவர்களால் ஏற்றி வைக்கப்பட்டது.

இந் நாளை நினைவிற் கொணடு, 2021 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 24 ஆம் நாள் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவையின் விசேட அமர்வு நவம்பர் மாதம் 21 ஆம் நாளை தமிழீழத் தேசியக்கொடி நாளாக பிரகடனம் செய்தது.

தேசியக்கொடிக்கு மதிப்பளித்து அதனைக் கொண்டாடும் வகையில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவை மேற்கொண்ட பிரகடனத்தின் அடிப்படையில் இவ் ஆண்டு மூன்றாவது தடவையாகத் தமிழீழத் தேசியக்கொடி நாள் கொண்டாடப்படுகிறது.

நான்கு நூற்றாண்டுகளுக்கும் மேலாக நீடித்த காலனித்துவ ஆட்சிக்காலத்தில் தமக்கான கொடியை இழந்த தமிழர் தேசத்துக்கு தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் உரிமை முரசறைந்து ஈழத் தமிழர் தேசத்துக்கான கொடியை அறிமுகம் செய்து வைத்தார்.

உலகில் முதன்முதலின் 1219ஆம் ஆண்டு டென்மார்க் நாடு தனக்கான கொடியை அறிமுகம் செய்திருந்தது. இந் நாளில் இருந்து சுதந்திரமடைந்த பல நாடுகள் தமக்கான தேசியக் கொடியை அறிமுகம் செய்து தேசியக்கொடி நாளைக் கொண்டாடி வருகின்றன.

உலகில் இதுவரை அரசமைத்துக் கொள்ளாத தேசங்களும் தமக்கான தேசியக்கொடிகளை பிரகடனம் செய்துள்ளமையினை நாம் காண முடியும்.

தமிழீழ தேசத்தின் தேசியக்கொடியும் அரசமைக்க விரும்பும் ஒரு தேசிய இனத்தின் அரசியல் பெருவிருப்பை முரசறைந்து சொல்லும் குறியீடாக நிலைத்து நிற்கிறது.

தமிழீழ மக்களின் ஒருமைப்பாட்டின் சின்னமாகவும், மாவீரர்களின் தியாகங்களின் சாட்சியாகவும். தமிழீழ மக்களின தேசப்பற்றின் வெளிப்பாடகவும் அமைந்து பட்டொளி வீசிப் பறக்கிறது.

1990 ஆம் ஆண்டு தமிழீழத் தேசியக்கொடி அறிமுகம் செய்யப்பட்ட போது தமிழீழத் தேசியக்கொடி குறித்து தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு விடுத்த உத்தியோகபூர்வப் பிரகடனத்தையும் நாம் இத் தருணத்தில் நோக்குதல் பொருத்தம் மிகுந்ததாகும். இதனை நான் கடந்த வருட கொடிநாள் உரையிலும் உள்ளடக்கியிருந்தேன். இதன் முக்கியத்துவம் கருதி இவ் வருட உரையிலும் நான் இதனைக் குறிப்பிடுகிறேன்.

"தேசிய சுதந்திரத்தை வேண்டி நிற்கும் ஒரு மக்கள் சமுதாயத்துக்கு ஒரு தேசியக்கொடி இன்றியமையாதது. தேசிய தனித்துவத்தையும், ஒருமைப்பாட்டையும், இறைமையையும் ஒரு தேசியக்கொடி சித்தரித்துக் காட்டுகிறது. தேசாபிமானத்தின் சின்னமாகவும் அது திகழ்கிறது. அரசியல் சுதந்திரத்தின் ஆணிவேரான குறியீடாகவும் தேசியக்கொடி அமைகிறது" எனத் தமிழீழத் தேசியக் கொடி அறிமுகம் செய்யப்பட்டமை குறித்து தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தெரிவித்திருந்தது.

மேலும், தேசியக்கொடியின் நிறங்களாக மஞ்சள், சிவப்பு கறுப்பு, வெள்ளை நிறங்கள் அமைந்திருப்பதற்கான காரணங்கள் குறித்தும் விடுதலைப்புலிகள் அமைப்பு மக்களுக்கு விளக்கம் அளித்திருந்தது.

தமிழீழ மக்களுக்கு ஒரு தாயகம் உண்டு. அந்தத் தாயகம் அவர்களது சொத்துரிமை. தமிழீழ மக்கள் தனியானதொரு தேசிய இனம் என்பதால் அவர்களுக்கு தன்னாட்சி உரிமை உண்டு. இந்தத் தன்னாட்சி உரிமை அவர்களின் அடிப்பமையான அரசியல் உரிமை. தமது தாயகத்தை மீட்டெடுத்து. தன்னாட்சி உரிமையினை நிலைநிறுத்தவதற்காக தமிழீழ மக்கள் மேற்கொண்டுள்ள போராட்டம் அறத்தின்பாற்பட்டது. மனித தர்மத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதனை மஞ்சள் நிறம் சுட்டி நிற்கிறது எனவும்,

தேசிய சுதந்திரம் பெற்று தமிழீழத் தனியரசை அமைத்து விட்டாற்போல நாம் முழுமையான சுதந்திரம் பெற்றதாகக் கொள்ள முடியாது. தமிழீழ சமுதாயத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகள் ஒழிக்கப்பட வேண்டும். வர்க்க சாதிய முரண்பாடுகள் அகற்றப்பட வேண்டும். பெண்அடிமைத்தனம் நீக்கப்பட வேண்டும. அதற்கு சமுதாயத்தில் புரட்சிகரமான மாற்றங்களைக் கொண்டுவரவேண்டும். சமத்துவமும் சமதர்மமும் சமூகநீதியும் நிலைநாட்டப்பட வேண்டும். இப்படியான புரட்சிகரமான மாற்றத்தை வேண்டிய அரசியல் இலட்சியத்தை சிவப்பு நிறம் குறியீடு செய்கிறது எனவும்,

விடுதலைப்பாதை கரடுமுரடானது. சாவும் அழிவும் தாங்கொணாத் துன்பங்களும் நிறைந்தது. இத்தனையையும் தாங்கிக் கொள்ள இரும்பு போன்ற இதயம் வேண்டும். அசைக்க முடியாத நம்பிக்கை வேண்டும். என்றும் தளராத உறுதி வேண்டும். கறுப்பு நிறம் மக்களின் மனஉறுதியினைக் குறித்துக் காட்டுகிறது எனவும்,விடுதலை அமைப்பும், மக்களும், தலைவர்களும் தூய்மையையும், நேர்மையையும் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை வெள்ளை நிறம் குறித்து நிற்கின்றது எனவும், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு மக்களுக்கு விளக்கம் அளித்திருந்தது.

தமிழர்கள் ஒரு தொன்மையான வரலாற்றைக் கொண்ட மக்கள். குறைந்தது 70 ஆயிரம் ஆண்டுகள் கொண்ட நீண்ட வரலாறு தமிழ் மக்களுக்கு உண்டு. இந்த நீண்ட நெடும் வரலாற்றுக்காலத்தில் தமிழ் மக்களிடம் அரசுகள் இருந்தன. இந்த அரசுகள் பல்வேறு கொடிகளைக் கொண்டவையாக அமைந்திருந்தன.

இதில் வரலாற்று முக்கியத்துவம் கொண்ட சோழப் பேரரசின் கொடியாக புலிக்கொடி அமைந்திருந்தது. தமிழர்களின் வீரத்தையும் மாண்பையும் பிரதிபலிப்பதாக இப் புலிக்கொடி அமைந்திருந்தது.

இப் புலிக்கொடியினை அடையாளமாகக் கொண்டு ஈழத் தமிழ் மக்களின் தேசிய விடுதலைப்போராட்டத்தினைப் பிரதிபலிக்கக்கூடிய வகையில் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் கொடியினையையும், தமிழீழத் தேசியக்கொடியினையும் வடிவமைக்கச் செய்தார்.

சோழர் ஆட்சிக்காலத்தில் பறந்த புலிக்கொடியின் வரலாற்றுநீட்சியாக தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் கொடியையும் தமிழீழத் தேசியக் கொடியையும் நாம் பார்க்க முடியும்.

தமிழீழத் தேசியக்கொடி தமிழீழ மக்களின் உணர்வுகளோடு கலந்திருக்கிறது. களத்தில் நின்று விடுதலை வேட்கையுடன் களமாடி மண்ணில் விதையாய் வீழ்ந்த மாவீரர்களின் நினைவுகளை என்றும் நிலைத்து நிற்கும் வகையில் மக்கள் மனங்களின் அசைந்து கொண்டிருக்கிறது.

நாம் நமக்கென்று சுதந்தரமும் இறைமையும் கொண்ட அரசினை அமைக்கும் வேணவாவுடன் உள்ள மக்கள் என்பதனை உலகுக்கு முரசறைந்து சொல்லி நிற்கிறது நமது தேசியக்கொடி.

உலகில் புதிய அரசுகள் உலகளாவிய ரீதியிலும், பிராந்திய ரீதியிலும் அமைந்திருக்கும் வலுவுள்ள அரசுகளின் நலன்களின் அடிப்படையிலும், அரசுக்காக போராடும் தேசிய இனங்களின் பலத்தின் அடிப்படையிலுமே உருவாக்கப்படுகின்றன

ஈழத் தமிழ் மக்கள் ஒரு வலுவான தேசம். இந்து சமுத்திரத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதியில் ஈழத் தமிழ் மக்களின் தாயகம் அமைந்திருக்கிறது.

ஈழத் தாயகத்துக்கு அருகில் 7 கோடிக்கும் மேற்பட்ட தமிழ்மக்களின் தாயகமாக தமிழ் நாடு அமைந்திருக்கிறது. வலுவான ஈழத் தமிழர்

டயாஸ்பொறா உலககொங்கும் பரந்துள்ளனர். உலகின் பலபாகங்களிலும் வாழும் தமிழ் மக்கள் ஈழத் தமிழ் மக்களுக்கு உறவுகளாக உள்ளனர்.

ஒரு வளமுள்ள வலுவான நாடு கடந்த தேசமாக அமைந்திருக்கும் தமிழீழ தேசம் தனக்கான அரசினை சுயநிர்ணய அடிப்படையிலும், மீண்ட இறைமையின் அடிப்படையிலும், ஈடு செய் நீதியின் அடிப்படையிலும் தனது தாயகத்தில் அமைக்கும் அரசியல் பெருவிருப்பத்துடன், அரசியல் கட்டாயத்துடன் வாழந்து கொண்டிருக்கிறது.

வரலாற்றுப் பெருநகர்வில் தமிழீழ தேசத்துக்கான கதவுகள் திறக்கும் வாய்ப்புகள் நிறையவே உண்டு. இதற்காகச் செயற்பட வேண்டிய கடமையும் ஆற்றலும் ஈழத் தமிழர் தேசத்துக்கு உண்டு. ஈழத் தமிழ் டயாஸ்றொவும் தமிழ்நாடும் இவ் விடயத்தில் காத்திரமான பங்கை ஆற்ற முடியும்.

இலங்கைத்தீவின் புவிசார் அரசியலில் ஈழத் தமிழ் மக்களை பங்காளரராக, தீவின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதில் ஒரு தரப்பாக நாம் மாற வேண்டும். இதற்குத் தேலையான அரசியல், பொருளாதார, இராஜதந்திர நகர்வுகளை நன்கு வடிவமைக்கபட்ட வியூகத்துடன் நாம் மேற் கொள்ள வேண்டும்.

நாம் நமக்கென்ற அரசை அமைக்கும் போது தான் நமது தேசியக்கொடிக்கு அனைத்துலக அங்கீகாரம் கிடைக்கும். அப்போதுதான் அனைத்துலக அரங்கில் நம் தேசியக்கொடி பட்டொளி வீசிப்பறக்கும் நாள் வரும்.

அதுவரை நமது தேசியக்கொடியை சுதந்திர வேட்கையுடன் நாம் ஏந்திக் கொள்வோம்.

சிங்கள பௌத்த இனவாத சிறிலங்கா அரசின் தமிழின அழிப்பில் இருந்து நாம் நம்மைப் பாதுகாத்துக் கொள்ள, சுதந்திரமும் இறைமையும் கொண்ட தமிழீழத் தனியரசொன்றை அமைப்பது மட்டும்தான் ஒரே வழி என்பதனை நாம் நமது தேசியக்கொடியினை எந்தியவாறு உலகுக்கு உரத்துச் சொல்வோம்.

நாம் ஏந்தும் தமிழீழத் தேசியக்கொடி இன வழிப்புக்கு எதிரான கொடி. சமத்துவத்துக்கான கொடி..

பெண் அடக்குமுறைக்கு எதிரான கொடி..

சாதிய ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிரான, சமூகநீதி நிலவும் சமூகம் அமைக்க அறைகூவல் விடுக்கும் கொடி..

சுற்றுப்புறச்சூழலுக்காக நீதி உலகெங்கும் சிலவ வேண்டும் என அவாவி நிற்கும் கொடி..

ஒட்டுமொத்தத்தில் தமிழ் மக்கள் மத்தியலும் உலகெங்கும் முற்போக்கு மாற்றங்களை வேண்டி நிற்கும் கொடி.

இத்தகைய நமது தேசியக்கொடியினை நாம் மனவெழுச்சியுடன்

போற்றுவோம்.. கொடி உயர நம் தேசம் வாழ அயராது உழைப்போம்.

வாழ்க தமிழீழத் தேசியக்கொடி.

தமிழர் தலைவிதி தமிழர் கையில்

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்.

## தமிழீழத் தனியரசுக்காக வித்...

கார்த்திகை 27 இன்று தமிழீழ தனியரசு கனவுடன் எம் மண்ணில் வித்தாகிப் போன மாவீரர்களை உணர்வுபூர்வமாக அஞ்சலி செய்வதற்கு தமிழர் தாயகத்தில் வாழும் அனைத்து மக்களையும் மாவீரர் துயிலும் இல்லங்களிலும், பொது இடங்களிலும் ஒன்று கூடுமாறு தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவை அறைகூவல் விடுக்கின்றது.

இது தொடர்பாக பேரவையின் தலைமை ஒருங்கிணைப்பாளர் எஸ். நிஷாந்தன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக எம் மக்களின் அன்றாட இயல்பு வாழ்க்கை முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் தான் நாம் எமது மாவீரர்களையும் அவர்களுக்கான நாட்களில் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்க வேண்டிய தேவையும், கடமையும், தார்மீக உரிமையும் எமக்கு உள்ளது.

எமது விடுதலைப் போராட்டம் முள்ளிவாய்க்காலில் மௌனிக்கப்பட்டதன் பின்னர் ஒரு சில ஆண்டுகள் எம்மால் மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு சென்று அஞ்சலிகளை செய்ய முடியாத ஒரு பாரதூரமான சூழ்நிலை காணப்பட்டது.

எமது துயிலும் இல்லங்களில் இருந்த மாவீரர் கல்லறைகள் சிறிலங்கா அரசினால் இடித்து, அழிக்கப்பட்டு இருந்த இடமில்லாமல் அகற்றப்பட்டிருந்தன அந்த துயிலும் இல்லங்கள் இருந்த இடம் எங்கும் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டிருந்தன.

அக் காலப்பகுதியில் தமிழர் தாயகத்து மக்கள் கார்த்திகை மாதம் 27 ஆம் தேதி வரும் போதெல்லாம் துயிலும் இல்லங்களுக்கு செல்ல முடியாமலும் அங்கு உறங்குகின்ற மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்த முடியாம லும் மிகுந்த மன வேதனையுடன் பொது இடங்களிலும், ஆலயங்களிலும், வீடுகளிலும் இவ் மாவீரர் தின நிகழ்வுகளை அனுஷ்டித்து வந்ததும் குறிப்பிடத்தக்கது. அந்த காலப்பகுதியில் தமிழகத்திலும், புலம்பெயர் தேசங்களிலும் மிகவும் பேரெழிச்சியான முறையில் எமது மாவீரர் தின நிகழ்வுகள் அனுஷ்டிக்கப் பட்டது. அங்கு வாழும் எம் புலம்பெயர் உறவுகள் அந்த நிகழ்வுகளில் பெருவாரியாக பங்கெடுத்து வந்திருக்கின்றார்கள். தற்பொழுதும் அதிகமான அளவில் பங்கெடுக்கின்றார்கள்.

தற்பொழுது ஶ்ரீலங்கா அரசில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் பிறகு இம்முறை ஒரு சில துயிலுமில்லங்களில் இருந்த இராணுவம் சற்று தொலைவில் அகற்றப்பட்டிருக்கின்றது. ஆனாலும் முற்றுமுழுதாக அனைத்து துயிலும் இல்லங்களும் இன்று வரை விடுபடவில்லை.

ஆகவே இம்முறை தமிழர் தாயகம் எங்கும் பேரெழுச்சியாக அங்கு இருக்கக்கூடிய துயி லும் இல்லங்களிலும், பொது இடங்களிலும், வீடுகளிலும் அனைத்து தமிழ் மக்களும் மாவீரர் தின நிகழ்வுகளை உணர்வு பூர்வமாக அனுஷ்டிப்பதற்கு தயாராகி வருகின்றனர். இன்றைய தினம் தாயகத்தில் வாழும் அனைத்து மக்களும் மாவீரர் தின நிகழ்வுகளில் பங்கெடுத்து வித்தாகிப்போன எமது மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்த வருமாறு தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவை அரை கூவல் விடுப்பதோடு தமிழகம் மற்றும் புலம் பெயர் தேசங்களிலும் வழமை போன்று இம்முறை பேரெழிச்சியாக மாவீரர் தின நிகழ்வு கள் நடைபெற இருக்கின்றன அந்த நிகழ்வு களிலும் அங்கு இருக்கக்கூடிய எமது இளையவர்கள் குறிப்பாக அடுத்த தலைமுறையினர் அனைவரும் இந்த மாவீரர் தின நிகழ்வுகளில் பங்கெடுத்துக் கொண்டு எமது வரலாறுகளை அறிந்தவர்களாகவும் எமது வரலாற்றை உலகமெங்கும் அழிய விடாது பாதுகாத்துக் கொண்டு செல்லக்கூடியவர்களாகவும் இருக்க வேண்டும் என தார்மீக உரிமையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மேலும் தமிழ் மக்களின் தேசக் கனவாகிய தமிழீழ விடுதலையின் அனைத்து அங்கங்களும் பலமான அத்திவாரத்தினாலேயே கட்டியெழுப்பப் பட்டன. அதற்கென ஆழமான பார்வையும், நீண்ட தீர்க்கமான வரைமுறையும் உண்டு. இன்று ஆட்டம் கண்டு நிற்கும் தமிழ் வாழ்வியலில் இவற்றைப் புறம் தள்ளிவிட்டுக் கடந்த செல்ல மாவீரர்களின் ஆன்மாக்கள் ஒரு போதும் சம்மதிப்பதில்லை.

பெருமை கொள் இவ்வரலாற்றை அனை வருடனும் பகிர்ந்து கொள்வதில் தமிழ்த் தேசியப் பண்பாட்டுப் பேரவை பெருமிதம் கொள்கிறது. அவை தீர்க்கதரிசனத்துடன் முன் கூட்டியே பதியப்பட்டுள்ளன என்பது யதார்த்தமாகும்.

"தமிழரின் வீர வரலாற்றில் என்றோ மாண்டு போன வீரமரபு, மீண்டும் மறுபிறப்பு எடுத்தது. அடிமைத்தனத்தின் அமைதியைக் குலைத்துக் கொண்டு, ஒரு புயல் எழுந்தது. சருகாக நெரிபட்ட தமிழன் மலையாக எழுந்து நிமிர்ந்தான். அடிமை விலங்குகளால் பிணைக்கப்பட்டு, நீண்ட நெடுங் காலமாகத் தூங்கிக் கொண்டிருந்த தமிழ்த்தேசம் விழித்துக் கொண்டது. இந்தத் தேசிய எழுச்சிக்கு மூச்சாக இருப்பவர்கள் எங்கள் மாவீரர் என்ற தமிழீழ தேசியத்ததலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் கருத்திற்கு ஏற்ப உலக வரலாற்றில் விடுதலைக்குப் போராடியவர்கள் எல்லோரும் குருதி, கண்ணீர், வியர்வை ஆகிய மூன்றையும் ஒருங்கு சேர விலையாகக்கொடுத்தே மாவீரர் என்கிற தகுதியை அடைந்தனர். இந்த நியதி தமிழர் தாயகத்துக்கும் பொருந்தும். 2009 மே க்குப் பின்னர் குருதிக்கு மட்டும் சமகாலத்தில் விதிவிலக்கு நிலையுள்ளது. ஆனால் கண்ணீரும் கவலையும் தமிழ் மக்களிடம் உள்ளது. அண்டவெளியில் இருள் என்பது எப்போதும் நிரந்தரம், இதனால் அந்த இருளை ஊடறுக்கும் ஒளி எப்போதுமே தேவைப்படுகிறது. இது ஒளிக்குரிய பிதாமகனான சூரியத்தேவனாக இருக்கலாம் இல்லையென்றால் சூரியத் தேவன் ஒளியூட்டும் உலகிலுள்ள ஒரு சிறிய மண்சுட்டியின் சுடராக இருக்கலாம்.

தமிழ்மக்களை பொறுத்தவரை ஒளி பிறந்த நாள் நவம்பர் 26ம், பல்லாயிரம் சுடர்களுக் குரிய நாள் நவம்பர் 27ம் ஆகும். சூரியன் அல்லது அகல் சுடர்கள் வழங்கும் செய்தி ஒன்றே ஒன்றுதான். அது தமிழர்களின் அபிலாசைகள்மீது கவியக்கூடிய அந்தகார த்தை ஊடறுத்து ஒளியீட்டும் கற்பிதங்கள் சார்ந்தது. தமிழினத்தின் விடுதலை வரலாறும் உதிரத்தினால் தான் எழுதப்பட்டது. விடுதலை வரலாறுகளின் சாவுகளுக்கு அர்த்தமில்லாமல் இல்லை. அவைதான் உலக வரலாற்றை இயக்கும் உந்து சக்தி. அதில் வித்துடல் சாசனம் என்னும் மாவீரர் நாள் ஒரு கலங்கரை விளக்கு. ஒடுக்கு முறை அந்தகார த்தில் இருந்து விடுபட்டு இனநீதி என்னும் ஒளிமிக்க பாதையில் செல்ல இந்த வித்துடல் சாசனமாகிய மாவீரர் தினம் உதவும் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கை தமிழ் மக்களு க்கு உண்டு முன்னேறி நடந்த தியாகத்தின் வழிகாட்டுதலில் தமிழர் தாயகத்தின் அரசியல் இருப்பை நிலைநிறுத்த நவம்பர் 26, 27 ஆகிய இரண்டு தினங்களுமே முக்கிய அடையாளங்கள். ஆம் அந்த அடையாள செய்தி களின் ஒளிப்பரவல் விரவுகிறது இது வித்துடல் சாசனமாகிய மாவீரர் நாளின் ஒளிப்பரவல்!

ஒன்று சேர்ந்து பயணிப்போம் உதிக்கும் திசை நோக்கி உன்னத பயணம்..!

இவ்வாறு தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.







# ஆக்கிரமிப்பதில் சிங்களத்திற்கு உள்ள வேகம் அதனை தடுப்பதற்கு தமிழ் மக்களிடம் இல்லை!

கிழக்கு மாகாணத்தின் தற்போதை நிலைமையினை பார்க்கும்போது இரண்டு நாடுகளுக்கு இடையில் நடைபெறும் பனிப்போரை நிலைமையினை வெளிப்படுத்தி உள்ளதுபோன்ற நிலைமையினை காணமுடிகின்றது.

இன்றைய நிலையில் கிழக்கில் நடைபெறும் செயற்பாடுகளை கடந்துசெல்லமுடியாத நிலைமையே காணப்படுகின்றது. குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தின் இன்றைய நிலைமையினை தொடர்ந்து வெளிக்கொணரவேண்டிய தேவை எங்களுக்கு உள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப்பகுதியில் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் என்பதை யாரும் இலகுவில் கடந்துசெல்லமுடியாது என்பதை அண்மைக்காலக செயற்பாடுகள் வெளிப்படுத்தி நிற்கின்றது.

குறிப்பா மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரை காணி பிரச்சினையென்பது வெறுமனே ஒரு பகுதியினரின் காணப்பிரச்சினையென்ற தொனியில் கடந்துசெல்லமுடியாது என்பதை அனைவருக்கும் இன்று உணரும் நிலைமையினை ஏற்படுத்தியுள்ளது.

கிழக்கு மாகாணத்தினைப்பொறுத்த வரையில் திட்டமிட்ட குடியேற்றங்கள் என்பது டட்லி சேனநாயக்க காலம் தொடக்கம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுவருகின்றது. 1956ஆம் ஆண்டு இதன்காரணமாக இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான பாரிய வன்முறை கட்டவிழ்த்துவிடப்பட்டமையே சிங்கள குடியேற்றங்கள் ஏற்படுவதற்கு முன்னெடுக்கப்பட்ட செயற்பாடாக கருதப்படுகின்றது. 1960ஆம் ஆண்டு வரை வடகிழக்கில் எந்த தொகுதியிலும் சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவான சரித்திரம் இல்லை. 1960ஆண்டு மார்ச் மாதம் நடந்த பொதுத்தேர்தலில்தான் முதன்முதலாக அம்பாறை தொகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரகட்சி கை சின்னத்தில் போட்டியிட்ட விஜேயசிங்க விஜயபாகு என்ற சிங்களவர் பாராளுமன்ற உறுப்பினரானார்.

1961ஆம் ஆண்டு ஏப்ரல்,10இல் மட்டக்களப்பு மாவட்டத்துடன் ஒன்றாக இருந்த அம்பாறை பிரிக்கப்பட்டு அம்பாறை மாவட்டம் என வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டது. 1977ஆம் ஆண்டு யூன்,24 ஆம் திகதி முதன் முதலாக தமிழர் தலைநகரமான திருகோணமலை மாவட்டத்தில் சேருவெல என்ற தொகுதி உரு



வாக்கப்பட்டு எச்.டி. லீலரெட்ண என்ற சிங்கள பாராளுமன்ற உறுப்பினர் தெரிவானார்.

1989,பெப்ரவரி,20 தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் தமிழ்பேசும் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்பட்டது. ஆனால் 1994, ஆகஷ்ட், 20, இடம்பெற்ற பொதுத்தேர்தலில் மொத்தம் 06, ஆசனங்களில் 04, சிங்களப்பாராளுமன்ற உறுப்பினர்களும், 02, முஷ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் தெரிவானார்கள்.

1994ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை அம்பாறை மாவட்ட நிலைமை சிங்கள, முஷ்லிம் அத்துமீறிய குடியேற்றங்கள் அதிகரித்த நிலையிலேயே காணப்படுகின்றது. அம்பாறை மாவட்டத்தினை பொறுத்த வரையில் 1960ஆம் ஆண்டிலிருந்து இன்று வரையில் 29தமிழ் கிராமங்கள் காணாமல்போயுள்ளன. அம்பாறையில் தமிழர்களின் வரலாற்று சுவடுகள் அழிக்கப்பட்டுள்ளன.




இதேபோன்று வடகிழக்கு தமிழர் தாயகத்தின் தலைநகரான திருகோணமலை மாவட்டம் சொல்ல வேண்டியதில்லை 1977இல் சேருவெல சிங்கள தொகுதி உருவாக்கப்பட்டு இன்று வரை அத்துமீறிய சிங்கள குடியேற்றங்களால் தமிழர்கள் மூன்றாம் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். அங் இன்றுமும் தமிழர்கள் வாழும் பகுதிகளுக்குள் விகாரை அமைப்புகள்,

திட்டமிட்ட குடியேற்றங்கள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. திருகோணமலையில் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு சொந்தமான நிலத்தில், 23 விகாரைகளின் கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் 31 விகாரைகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருக்கின்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேபோன்று வனப்பாதுகாப்பு திணைக்களம் 43435 ஏக்கர் காணியினையும், தொல்பொருள் திணைக்களம் 2605 ஏக்கர் காணியினையும், புல்மோட்டை அரசிமலை பௌத்தப்பிக்கு கிழக்கு செயலணி 2908 ஏக்கர் காணியினையும் ஆக்கிரமித்துள்ளனர்.

மேலும் அண்ணளவாக முப்பதாயிரம் ஏக்கர் காணியை வனவிலங்கு திணைக்களம் தங்களுக்குரியது என தெரிவித்து வருவதால் 28 ஆயிரம் கால்நடைகளுக்கு மேய்ச்சல் தரை இன்றி பண்ணையாளர்கள் அவதியுற்று வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர் ஏறக்குறைய 74, வீதமும், இஷ்லாமியர் 25, வீதமும், சிங்களவர் 1, வீதமாகவும் உள்ள நிலையில் (2023, புள்ளிவிபரம் எடுத்தால் தமிழர் வீதம் இன்னும் குறையலாம்) சிங்களவர்களின் வீதத்தினை அதிகரித்து எதிர்காலத்தில் அரசியல் ரீதியான இருப்பினை உறுதிப்படுத்துவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தற்போது மயிலத்தமடு, மாதவனை, கெவிளியாமடு ஆகிய மேச்சல் தரைகளை இலக்கு வைத்து அம்பாறை, பொலன்றுவை, மொனறாகலை மாவட்ட சிங்கள மக்களை வரவழைத்து அத்துமீறிய சிங்கள குடிப்பரம்பலை மேற்கொண்டு மட்டக்களப்பு மாவட்டத்தையும் எதிர்காலத்தில் 2030ஆம் ஆண்டு தேர்தலில் ஒரு சிங்கள பாராளுமன்ற உறுப்பினரை உருவாக்கும் சதித்திட்டம் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

இவ்வாறான நிலையிலேயே மட்டக்களப்பு சித்தாண்டியில் 50நாட்களையும் தாண்டிய வகையில் கால்நடை பண்ணையாளர்கள் போராட்டத்தினை முன்னெடுத்து வருகின்றனர். இந்த போராட்டம் பண்ணையாளர்களின் போராட்டமாக மட்டுமல்லாமல் கிழக்கின் முழு இருப்புக்கான போராட்டமாக மாற்றமடையும் நிலையுருவாகிவருகின்றது.

அண்மையில் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டமும் வடக்கிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் குழுவினரின் வருகையும் இந்த போராட்டத்தினை அடுத்த கட்ட நிலைக்கு கொண்டுசெல்லும் நிலை காணப்படுகின்றது.

கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் இதுவரையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பாரியளவிலான உரிமைசார்ந்த போராட்டங்களை



முன்னெடுக்கவில்லை.

குறிப்பாக நில ஆக்கிரமிப்புக்கான போராட்டம் என்பது கிழக்கு பல்கலைகழக மாணவர்கள் மத்தியில் இருந்துவெளிப்படுவது குறைந்தளவிலேயே காணப்பட்டுவந்த நிலையில் அண்மையில் வீரியம்கொண்ட போராட்டம் ஒன்று நடைபெற்றமையானது ஒட்டுமொத்த வடகிழக்கினையும் ஆட்டம்காணவைத்துள்ளது.

கிழக்கு பல்கலைக்கழகத்தில் ஆரம்பமான போராட்டமானது பல்கலைக்கழகத்திலிருந்து சுமார் 05 கிலோமீற்றருக்கும் அதிகமான தூரம் பேரணியாக சென்றதானது பாரிய எழுச்சியை தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

இந்த போராட்டத்தில் கலந்துகொண்ட மாணவர்கள் உணர்வெழுச்சியுடன் இலங்கை அரசாங்கத்திற்கும் அத்துமீறிய குடியேற்றவாசிகளுக்கும் எதிராக எழுப்பிய கோசங்கள் என்பதை வெறுமனே யாரும் சாதாரணமாக கடந்துசெல்லமுடியாது. இன்று கிழக்கு பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள ஏழுச்சியானது ஒட்டுமொத்த கிழக்கு மாகாணத்திலும் ஏற்படவேண்டும். ஒட்டுமொத்த கிழக்கிலும் இந்த ஏழுச்சி ஏற்படவேண்டுமானால் வடகிழக்கு மாகாணம் எங்கும் எழுச்சி ஏற்படவேண்டும்.

மட்டக்களப்பில் கால்நடை பண்ணையாளர்களின் போராட்டத்தில் கலந்துகொண்ட யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன்,

“தமிழ் மக்களின் அடிப்படையான அவர்களின் நிலத்தினை பறித்தல் என்பது அவர்களை வாழவிடாமல் அகற்றுவதற்கான முயற்சியை முன்னெடுத்துவருகின்றது. அந்த முன்னெடுப்புகளில் ஒன்றுதான் மயிலத்தமடு, மாதவனை பகுதிய செயற்பாடாகும். இது இன்று



நேற்று அல்ல டட்லி சேனநாயக்க காலத்தில் நினைத்த விடயத்தினை ஜேஆர் காலத்தில் நடைமுறைப்படுத்த முயற்சித்தார்கள். தற்போது ஜனநாயகம் பேசிக்கொண்டு நிலங்களை பறித்துக்கொண்டு சிங்கள மயப்படுத்தி கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் இருப்பினை இல்லாமல்செய்வதில் இந்த அரசாங்கம் பாரிய முனைப்பினை காட்டிவருகின்றது

அம்பாறையில் தமிழ் மக்களின் இருப்புகளையும் பிரதிநிதித்துவத்தையும் இழந்துவரும் நேரத்தில் திருகோணமலையிலும் அதே நிலைமையினை எதிர்கொண்டுள்ள காலச்சூழலில் தொடர்ந்தும் நாங்கள் பாதிக்கப்படுகின்றோம், வஞ்சிக்கப்படுகின்றோம். அதற்கு எதிராகவே மக்கள் போராட்டத்தினை முன்னெடுத்திருக்கின்றார்கள். அவர்களுக்கு ஆதரவு வழங்குவது என்பது எங்களது கடமையாகும். இது தொடர்பில் சட்ட நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

ஜனாதிபதி அப்பகுதியில் உள்ள சட்ட விரோத குடியேற்றகாரர்களை அகற்றுமாறு கூறிய பின்னரும் அப்பகுதியில் புத்தர்சிலையினை வைத்தார்கள், சட்ட விரோதமாக அம்பிட்டிய தலைமையிலான அராஜககுழு தொடர்ந்து செயற்பட்டுவருகின்றது. முன்னாள் ஆளுனர் அனுராதா ஜகம்பத் தலைமையில் நிலப்பறிப்பு செயற்பாடுகள் இந்த விடயம் தொடர்பில் சட்ட ரீதியான நடைமுறைகள் நடைமுறைப்படுத்தாவிட்டால் நாங்கள் வடகிழக்கில் மாபெரும் மக்கள் அலையினை உருவாக்கி அரசாங்கத்திற்கு ஒரு பதிலை சொல்லவேண்டிய நாள் வெகு தொலைவில் இல்லை”என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்த கருத்து வெறும் அரசியல் ரீதியான கருத்தாக இல்லாமல் கிழக்கு மாகாணத்தில் முன்னெடுக்கும் செயற்பாடுகள் வடகிழக்கு ரீதியாக எழுச்சிபெறும்போது கிழக்கில் தமிழர்களின் நிலங்கள் பாதுகாக்கப்படும். இன்று மயிலத்தமடு, மாதவனையில் அத்துமீறிய காணி அபகரிப்புகளில் ஈடுபடுவோருக்கு தென்னிலங்கையில் உள்ள இனவாத சக்திகள் பாரியளவில் உதவிகளை வழங்கிவரும் நிலையில் இவற்றினை தடுத்து நிறுத்தி தமிழர்களின் தாயப்பகுதியை பாதுகாக்கவேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உள்ளது.

- மட்டு நகரான்-

# போர் முனையில் போரிட்டவர்க்கு சமமாக பேனா பிடித்த

# ஈழத்தின் ஊடகப் பேராசான் எஸ்.எம். கோபாலரத்தினம் !



**(ஈழப் போர்க் களத்தில் பேசப்படாத பக்கங்களை வரைந்த ஊடகப் பேராசான் எஸ்.எம்.ஜி அவர்களின் 1930 அக்டோபர் 03இல் பிறந்த நாள் நினைவாக இக்கட்டுரை பிரசுரமாகிறது)**

ஈழத்தின் ஊடக வரலாற்றில் பல நெருக்கடியான காலகட்டங்களில் தனது எழுத்துக்களின் ஊடாக தமிழ் மக்களுக்கான உண்மை விடயங்களை தெரிவித்துக் கொண்டிருந்தவரே ஊடகப் போராளி எஸ்.எம்.ஜி எனும் போற்றுதற்குரிய கோபாலரத்தினம்.

ஈழத் தமிழ் ஊடகவியலில் தனித்துவ முன்னெடுப்பாளராக வாழ்வுத் தடமிட்ட கோபு எனும் எழுத்தாணியே எஸ்.எம்.ஜி எனும் எஸ்.எம்.கோபாலரத்தினம் 2017 நவம்பர் 15 இல் மட்டக்களப்பில் இயற்கை எய்தினார்.

ஈழ ஊடகத்துறையில் அனுபவம் மிகுந்த பேராசானாக விளங்கிய எஸ்.எம். கோபாலரத்தினம் அவர்கள், 50 ஆண்டுகளுக்கு மேலாக ஊடகத்துறைக்கு ஆற்றிய பங்களிப்புக்காக தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன், அவர்களால் 2004ஆம் ஆண்டு ஜூன் 04ஆம் திகதி விருது வழங்கி மதிப்பளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

ஈழத்தின் போர்க்கால வரலாற்றில் கள முனையில் நின்று போரிட்டவர்களுக்கு சமமாகப் பேனா பிடித்து எழுதியவர்களில் எஸ்.எம். கோபாலரத்தினம் முதன்மையானவர்.

அவர் எழுதிய ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை என்ற நூல் ஈழத்தில் இந்திய இராணுவம் நிலை கொண்டிருந்த போது நிகழ்த்திய நீண்ட துன்பியல் வன்முறைக் களத்தில் பேசப்படாத பக்கங்களில் ஒரு சில பக்கங்களை நிரப்பும் நூலாக அமையும் வகையில் மிக முக்கியமானதொரு ஆவணமாகத் திகழ்கின்றது.

ஈழத்தின் பத்திரிகைத்துறையில் பல சிறந்த பத்திரிகையாளர்களையும் பத்திரிகை ஆசிரியர்களையும் இவர் உருவாக்கினார். தமிழ் தேசியம் சார்ந்து இவர் ஆற்றிய பணிகளுக்காகவே புலிகளின் தலைவர் பிரபாகரன் இவருக்கு தங்கப் பதக்கம் வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

**மூத்த ஊடகவியலாளர் எஸ்.எம். கோபாலரத்தினம்:**

ஊடகத்துறையினரால் பெரிதும் மதிக்கப்பட்ட ஈழத்தின் மூத்த ஊடகவியலாளர் எஸ்.எம். கோபாலரத்தினம், 87 வயதில் மட்டக்களப்பில் இயற்கை எய்தினார்.

1930ஆம் ஆண்டு அக்டோபர் 03ஆம் திகதி பிறந்த எஸ்.எம்.ஜி, கொழும்பில் வீரகேசரி நாளிதழில் ஒப்பு நோக்குநராக ஊடகத் துறைக்குள் காலடி எடுத்து தடம் பதித்தவர்.

இவர் பத்திரிகை ஆசிரியராக செயற்பட்ட காலத்திலேயே ஈழநாடு பத்திரிகை தமிழ் மக்கள் மத்தியில் மிகவும் பிரசித்தம் பெற்றது.

ஏழு ஆண்டுகள் பணியில் கடமையாற்றிய பின்னர், யாழ்ப்பாணத்தில் ஈழநாடு நாளிதழில் பணியாற்றத் தொடங்கினார். ஈழநாடு நாளிதழின் செய்தி ஆசிரியராகவும் ஆசிரியராகவும் பணியாற்றிய அவர், பின் ஈழமுரசு, ஈழநாதம் ஆகிய நாளிதழ்களின் ஆசிரியராகவும் செயற்பட்டார்.

1981இல் இலங்கை இராணுவத்தால் ஈழநாடு பத்திரிகை எரியூட்டப்பட்ட போது கோபாலரத்தினம் தெய்வாதீனமாக உயிர் தப்பியிருந்தார்.

ஊர்சுற்றி, கோபு, எஸ்.எம்.ஜி, செந்தூரன், போன்ற பல புனை பெயர்களில் ஏராளமான கட்டுரைகளை எழுதிக் குவித்தவர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த நமது ஈழநாடு நாளிதழின் ஆசிரியபீட கௌரவ ஆலோசகராகவும், இவர் பணியாற்றியிருந்தார். ஈழத்துத் தமிழ் ஊடகவியலாளர் பலர் தமது ஊடகப் பயண அனுபபங்களை நூலுருவில் ஆக்கியிருந்தாலும் போரியல் சார்ந்த வரலாற்றுப் பகிர்வுகளைச் சுய தணிக்கை செய்தே எழுத வேண்டிய நிலை இருந்தது. ஒரு சில விதிவிலக்குகள் இருப்பினும் இதுவே நடைமுறை யதார்த்தம். இதனை எல்லாம் மீறி உண்மையை பறை சாற்றியவர் எஸ்.எம்.ஜி.

**ஆறு தசாப்த பத்திரிகையாளர்:**

ஆறு தசாப்தங்களாகப் பத்திரிகையாளராக வாழ்ந்தவர் எம்.எஸ்.கோபாலரத்தினம் அவர்கள் எழுதிய ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை என்ற நூல் ஈழத்தில் போர்கள வரலாற்றுப் பதிவாகும்.இந்த நூலுக்கு அணிந்துரை வழங்கிய பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் "1987 ஒக்ரோபர் முதல் 1990 பெப்ரவரி வரை இலங்கையிலிருந்த அமைதிப்படை பற்றி வாத விவாதங்கள் நிறைய உண்டு. வரலாற்றின் தவிர்க்க முடியாத குருதிக் குலைவுகளில் ஒன்றாக அது அமைந்து விட்டது.

இன்று ஒரு தசாப்தத்தின் பின் மீளத் திரும்பிப் பார்க்கும் பொழுது இந்த நாடகத்தில் (இலங்கையின் இனக் குழும நெருக்கடி) இந்தியாவுக்கு ஒரு முக்கியமான வகிபாகம் உண்டு என்பது புறக்கணிக்கப்படக் கூடாத உண்மை என்பது புலனாக்கப்பட்டுள்ளது. இதை நாம் உணர்ந்து கொள்ளல் வேண்டும்என்கிறார், இந்த நூலுக்கு அணிந்துரை வழங்கிய பேராசிரியர் சிவத்தம்பி.

எம்.எஸ்.கோபாலரத்தினம் வீரகேசரியில் தொடங்கி ஈழநாடு, ஈழ முரசு, காலைக்கதிர், செய்திக்கதிர், ஈழ நாதம், தினக்கதிர் (மட்டக்களப்பு), சுடரொளி ஆகிய பத்திரிகைகளிலும் பணியாற்றியவர். இவரின் அரை நூற்றாண்டுப் பணிக்காக 2004 ஆண்டு தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரனால் தேசிய சின்னம் பொறித்த தங்கப் பதக்கம் பெற்றிருக்கிறார்.

அத்துடன் ஸ்ரீ ரங்கன் என்ற பெயரில் சிறுகதைகளில் எழுதியதோடு எஸ்.எம்.ஜி, பாலரத்தினம், ஊர் சுற்றி ஆகிய பெயர்களில் பத்திரிகையில் பணியாற்றியிருக்கிறார். ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை, அந்த உயிர் தானா உயிர், பத்திரிகைப் பணியில் அரை நூற்றாண்டு ஆகிய நூல்களையும் எழுதியிருக்கிறார்.

**ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை:**

1987களில் ஈழமுரசு பத்திரிகையின் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்த வேளை இந்திய இராணுவத்தால் கைது செய்யப்பட்டு 62 நாட்கள் சிறையில் இருந்த போது பெற்ற அனுபவம், அங்கு கண்டு கேட்டுப் பெற்றவைகளையே . ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறையில் எழுதியிருக்கிறேன் என்று நூலாசிரியர் எம்.எஸ்.கோபாலரத்தினம் குறிப்பிடுகிறார்.

1987 அக்டோபர் 10ஆம் அதிகாலை வேளை, தமிழர் பூமியை ஆக்கிரமித்திருந்த இந்திய இராணுவம், தமிழர்களின் குரலாக வெளிவந்து கொண்டிருந்த ஊடகங்கள் மீதான தனது எதேச்சாதிகார நடவடிக்கையை மேற்கொண்ட கரி நாளாகும்.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் 1987 ஜூலை 29இல் கைச்சானதின் பின்னர், ஈழத்தில் ஊடகத்துறையின் சுதந்திரத்தை முடக்க உருவாக்கும் வகையில், நிதர்சனம், ஈழமுரசு, முரசொலி நிலையங்களின் தகர்ப்பு அழிப்பு நிகழ்ந்தது.

1987 ஐப்பசி 10ம் நாள் காலை அமைதிப் படையினர் யாழ்ப்பாண நகரிலுள்ள இரு தமிழ் தினசரிப் பத்திரிகைகளான ஈழமுரசு, முரசொலி காரியாலயங்களுக்குள் புகுந்து, பின்னர் பத்திரிகை அச்சு இயந்திரத்திற்குள் வெடி குண்டுகளை வைத்து அவற்றைத் தகர்த்தனர்.

**இந்திய அமைதிப் படை போர்:**

இந்தியப் அமைதிப் படை 1987 அக்டோபர் 10 ஆம் நாள் விடுதலைப் புலிகளிற்கெதிராகப் போரைப் பிரகடனம் செய்து தமிழரிற்கெதிரான போரினை நடத்தியது. போரில் இந்திய இராணுவம் பீரங்கி, டாங்கி போன்ற கனரக ஆயுதங்கள் சகிதம் குடியிருப்புக்கள் நிறைந்த பகுதிகள் மீது தாக்குதல்களை நடத்தியது.

அத்துடன் ஈழமுரசு, முரசொலி, நிதர்சனம் போன்ற ஊடகங்களை தகர்த்தொழித்து தமிழர்கள் மீதான போர் பற்றிய செய்திகள் வெளியே வராமல் பார்த்துக் கொண்டது இந்திய அமைதிப்படை.

அமைதி காப்பதற்காகவும் , ஈழத் தமிழர்களுக்கு பாதுகாப்பதற்காக வந்த இந்திய இராணுவம் ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை அமைத்தது. இவ் இந்திய இராணுவத்தினால் கைது செய்யப்பட்டு இவ் சிறையில் அடைக்கப்பட்ட ஒரு பத்திரியாளரின் பதிப்பாக இது அமையப் பெற்றுள்ளது.

இச்சிறையில் விடுதலைப் புலிகள் என சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்ட நூற்றுக் கணக்கானவர்ளுடன், ஈழமுரசு, முரசொலி பத்திரிகையின் ஆசிரியரும் கைது செய்யப்பட்டனர் .

இந்திய அமைதிப் படைகளால் சிறைவைக்கப் பட்டிருந்த போது, எழுதிய எஸ்.எம். ஜி இன் சிறைக்குறிப்புகள், தமிழ்நாட்டில் ஜூனியர் விகடன் இதழில் 'ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை' என்ற தலைப்பில் தொடராக வெளியாகி பெரும் பரபரப்பானது என்பதும் குறிப்பிடத் தக்கது.

இந்தியாவை தாய் நாடு என்றும், இலங்கையினை சேய் நாடு என்றும் அழைத்து வந்த காலங்கள் இந்தியப்படையினரின் இப்படிப்பட்ட அநாகரியமான செயலினால் , இந்திய அரசின் சுயநல நோக்கத்திற்காக ஈழ மக்களினை பல துன்பியலுக்கு உட்படுத்தப்பட்டதனை எம் தமிழ் இனத்தின் சிந்தனையில் இருந்து ஒரு போதும் அழித்து விட முடியாது என்பதே நிதர்சண உண்மையாகும் என எஸ்.எம்.கோபாலரத்தினம் எழுதிய ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறையில் குறிப்பிட்டுள்ளார்.

அமைதி காப்பதற்காகவும் , ஈழத் தமிழர்களுக்கு பாதுகாப்பதற்காக வந்த இந்திய இராணுவம் ஆக்கிரமிப்புப் படையாக மாறிய பின் ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை அமைந்தது. இவ் இந்திய இராணுவத்தினால் கைது செய்யப்பட்டு இச்சிறையில் அடைக்கப்பட்ட ஒரு பத்திரியாளரின் பதிவாக ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை எனும் நூல் அமையப்பெற்றுள்ளது.

முக்கியமான வேதனைக்குரிய ஒரு விடயம் என்னவென்றால் இலங்கை இராணுவத்தினால் அமைக்கப்பட்ட "பூசா" தடுப்பு முகாமில் இருந்து விடுவிக்கப்பட்ட பலரும் இந்திய இராணுவத்தினால் கைது செய்யப்பட்டது, மட்டுமல்லாது பல கஷ்டங்களையும் சந்தித்தனர் என்பதனை நேரில் பார்த்த பல வேதனையினை 'ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை' எனும் நூல் விபரிக்கின்றது.

இலங்கையின் வட, கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ் மக்களினை பாதுகாப்பதற்காக வந்த இந்திய இராணுவத்தினால் கைது செய்யப்பட்ட அப்பாவி தமிழ் மக்களின் கை மற்றும் கால்களினை கட்டி வைத்து அவர்களை துன்புறுத்தி அதனை பார்த்து சந்தோஷப்பட்டார்கள் இந்திய இராணுவத்தினர் என்பதனை கவலையுடன் எழுதியுள்ளார்.

இவ்வாறு தான் பெரும்பாலான எம் தமிழ் இளைஞர்களின் வாழ்க்கை இப்படிப்பட்ட சிறைகளுக்குள்ளே முடக்கப்பட்டு இருந்துள்ளது என்பதனை எம்மால் புரிந்துக்கொள்ளக் கூடியதாக இருப்பதது , மட்டுமல்லாது உதவி செய்வதாக வந்து எம் இனத்துக்கு துரோகம் செய்ததை யாரும் மறக்க மாட்டார்கள்.

**அந்த ஒரு உயிர் தானா உயிர் :**

வீரகேசரி நாளிதழில் தனது பத்திரிகைத் துறைப் பிரவேசத்தை ஏற்படுத்திக்கொண்ட ஆசிரியர் தலையங்கங்கள் அந்த ஒரு உயிர் தானா உயிர் எனும் நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஈழநாதம் பத்திரிகையில் வெளிவந்த இரண்டு ஆக்கங்களைத் தவிர மற்றவை மட்டக்களப்பிலிருந்து வெளிவரும் தினக்கதிர் நாளேட்டில் பிரதம ஆசிரியராக இருந்த




வேளையில் எழுதப்பட்டவை.

அனைத்தும் சமகால அரசியல் நிலையை வைத்து எழுதப்பட்டவை. தமிழ்மக்களின் மன எழுச்சியையும் இவை பிரதிபலிப்பனவாக அமைந்துள்ளன.

தமிழ் மக்களின் எந்தக் கருத்துக்களும் நிலைப்பாடுகளும் வெளியுலகம் அறியமுடியாதவாறு ஊடக முடக்கம் 1987இல் இந்தியப் படைகளால் தொடர்ந்தது. இது உண்மைகளை அறிவிக்கும் ஊடகங்களின் ஊடகச் சுதந்திரம் அற்ற நிலையை உருவாக்கியது.

அப்பாவித் தமிழ் மக்கள் வாய் பேசா ஊமைகளாக மௌனிகளாக இந்தியப் படைகளின் போர்க் காலத்தில் வாழத் தலைப்பட்டனர். இராணுவ இயந்திரத்தின் கட்டுப் பாட்டில் தமிழ் மக்களின் குரல் எப்படி வெளிவரும்? அவர்களின் அபிலாசைகள் எங்கேயும் எப்பொழுதும் வெளி வராமல் தடுக்கப்பட்டன.

ஆயினும் வியட்நாம் போரின்போது 1974-ஆம் ஆண்டு போர்க்களத்தில், பாஃன் தி கிம் என்ற வியட்நாம் சிறுமி ஒருவள் உடலில் தீக்காயங்களோடு நிர்வாணமாக ஓடி வரும் அந்த ஒரு காட்சி உலகையே உறைய வைத்தது. அந்தப்படம் போருக்கு எதிராக மக்களை ஒன்றுதிரட்ட பேருதவி செய்தது. அதனை செய்ததும் இதே போன்ற ஊடகங்கள்தான்.

இதற்கு ஒப்பாகவே ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை என்ற நூல் ஈழத்தில் இந்திய இராணுவம் நிலை கொண்டிருந்த போது நிகழ்த்திய நீண்ட துன்பியல் வன்முறைக் களத்தினை விபரிக்கும் சாட்சியமாக, மிக முக்கியமானதொரு ஆவணமாக உள்ளது.

எஸ்.எம்.கோபாலரத்தினம் தான் கைபிடித்த பேனாவை - எழுதுகோல் கருவியை நேசித்து வரலாற்றை புனைவின்றி உண்மையின் பதிவாக காலத்தின் பதிவேடுகளில் பதிந்தவர். ஊடகர் எஸ்.எம்.கோபாலரத்தினம் எழுத்துக்கள் ஈழப்போர்க்கால களத்தின் சாட்சியங்களாக வரலாற்றில் நிலைபெற்றிருக்கின்றன.

**- ஐங்கரன் விக்கினேஸ்வரா-**

# தலைவர் பிரபாகரன் யார்?

## என கேட்கக்கூடிய நிலை தான் இங்கு காணப்படுகின்றது

வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம்



இன்னும் பத்து வருடங்களில் தலைவர் பிரபாகரன் யார் என கேட்கக்கூடிய நிலை தான் இங்கு காணப்படுகின்றது என வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தினால் மர நடுகை மாதத்தை முன்னிட்டு நடாத்தப்படும் "கார்த்திகை வாசம்" மலர்கண்காட்சி ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்னும் பத்து வருடங்களில் தமிழ் தேசிய தலைவர் பிரபாகரன் யார் என இருக்கக்கூடிய நிலைமை தான் இங்கு காணப்படுகின்றது.

எங்கள் மக்களிடத்தில் மறதி என்கின்ற பண்பு வளர்ந்து வருகின்றது இதன் காரணமாக மக்கள் பழைய விடயங்களை மறக்கின்ற நிலைமை காணப்படுகின்றது.

குறிப்பாக ஐங்கரநேசன் என்பவர் ஒரு தமிழ்த் தேசிய உணர்வோடு நீண்ட காலமாக பயணித்து வருபவரினால் இந்த மர நடுகை மாதம் ஆண்டுதோறும் சிறப்பாக முன்னெடுக்கப்படுகின்றது

குறிப்பாக மாகாண சபை செயற்பாட்டில் இருந்த போது திரு ஐங்கரன் அவர்கள் விவசாய அமைச்சராக இருந்தபோது இந்த கார்த்திகை மாதத்தினை மர நடுகை மாதமாக பிரகடனப்படுத்தி தீர்மானத்தை நிறைவேற்றினோம்.

எனவே மாகாண சபையின் அவைத்தலைவர் என்ற ரீதியில் அந்த தீர்மான நிறைவேற்றியதில் எனக்கும் ஒரு பங்கு உண்டு.

ஆகவே எனக்கு அதில் ஒரு சந்தோஷம் உள்ளது அதாவது இந்த மரநடுகை மாதத்தை தீர்மானமாக நிறைவேற்றியதில் நானும் பங்காற்றி இருக்கின்றேன் என ஐங்கரநேசன் மாத்திரம் தற்பொழுது இந்த மரநடுகையை செயற் திட்டத்தினை முன்னெடுத்து வருகின்றார்.

ஆனால் மாகாண சபை செயற்பாட்டில் இருந்த காலத்தில் இந்த செயற்திட்டமானது வடக்கு மாகாணத்தில் எல்லா மாவட்டத்திலும் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டது ஆனால் தற்பொழுது அந்த நிலை மாறிவிட்டது மரநடுகை தற்பொழுது தமிழ் தேசிய பசுமை இயக்கத்தினால் மாத்திரமே முன்னெடுக்கப்படுகின்றது அது ஐங்கரநேசனால் மாத்திரம் முன்னெடுக்கப்படுகின்றது.

ஐங்கரநேசன்இந்த மண்ணினுடைய மர நடுகை மைந்தனாக அந்த பெருமையோடு மேலும் இந்த கைங்கரியத்தினை முன்னெடுப்பதற்கு இந்த சமூகம் அவரோடு இணைந்து பயணிக்க வேண்டும் ஆதரிக்க வேண்டும் ஒத்துழைக்க வேண்டும் இந்த விடயத்தினை தொடர்ச்சியாக அவர் முன்னெடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்,

# மனிதச்சங்கிலி போராட்டத்தின் அர்த்தத்தினை

## சில அரசியல்வாதிகள் கொச்சைப்படுத்தி விட்டார்கள்

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன்



அகிம்சை ரீதியான போராட்டங்களில் மிகவும் வலுவான போராட்டமான மனிதச்சங்கிலி போராட்டத்தின் அர்த்தத்தினை சில அரசியல் வாதிகள் கொச்சைப்படுத்தி விட்டார்கள் என தமிழ்த்தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ ஐங்கர நேசன் தெரிவித்தார்

தமிழ் தேசிய பசுமை இயக்கத்தினால் மர நடுகை மாதத்தை முன்னிட்டு நடாத்தப்படுகின்ற கார்த்திகை வாசம் மலர் கண்காட்சி ஆரம்ப நிகழ்வில் உரையாற்றும்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலுடன் எமது ஆயுத போராட்டம் மௌனிக்கப்பட்டது.

அதற்கு பின்னர் நாம் இனி துப்பாக்கி தூக்கி போராடக்கூடிய நிலைமையில் இல்லை ஆனால் அதற்கு ஒத்ததாக அகிம்சை ரீதியாக போராட முடியும் ஆனால் அதனை தலைமை தாங்குவதற்கு தலைமையேற்பதற்கு யாரும் இல்லை மக்களை சரியாக வழிபடுத்தவும் ஒழுங்கான தலைமை இல்லை

உதாரணமாக நான் ஒன்றை கூற விரும்புகின்றேன் அண்மையில் ஒரு கட்சியை சேர்ந்தவர்கள் மனித சங்கிலி போராட்டம் என மருதனார் மடம் சந்தியிலிருந்து யாழ்ப்பாணம் வரை மனித சங்கிலி போராட்டத்திற்கு அழைப்பு விட்டார்கள். ஆனால் அதில் கட்சி ஆதரவாளர்கள் கூட. பங்குபற்ற வில்லை வீதியால் சென்றவர்கள் அந்த மனித சங்கிலி போராட்டத்தில் பங்கு பற்றியிருந்தாலேயே யாழ்ப்பாணம் வரைக்கும் அந்த மனித சங்கிலி போராட்டம்நீண்டிருக்கும். ஆனால் விதியால் சென்றவர்களும் பார்வையாளர்களாகவே சென்றதன் காரணமாக அந்த போராட்டம் கொச்சைப்படுத்தப்பட்டு மனித சங்கிலி போராட்டம் தோல்வி அடைந்துள்ளது.

எமது அஹிம்சை ரீதியான போராட்டம் சரி ஏனைய போராட்டங்கள் என்றாலும் அதனை செயற்படுத்துவதற்கு ஒழுங்கான தலைமைத்துவம் இல்லை இந்த மனித சங்கிலி போராட்டத்திற்கு அழைப்பு விட்டவர்கள் அதனை ஒழுங்கான முறையில் செயற்படுத்தவில்லை என்றே கூறலாம்.

நான் ஏற்கனவே குறிப்பிட்ட விடயம் ஒன்றினை குறிப்பிட விரும்புகின்றேன்.

காலையில் உண்ணாவிரத போராட்டத்தில் இருந்த ஒருவர் 11 மணியளவில் கல்வியக்காடு சந்தையில் மீன் வாங்க நிற்கின்றார்போராட்ட முடிவு நேரத்தில் அவரை உண்ணாவிரத பந்தலில் கண்டேன் இப்படியான தலைவர்கள் இருக்கும் நிலையில் எமது போராட்டங்கள் எவ்வாறு வெற்றியடையும்?

எமது மாவீரர்களின் வரலாறுகளை எதிர்கால சந்ததியினருக்கு இந்த மரநடுகை மாதத்தின் மூலமாவது கடத்த வேண்டும்.

நாங்கள் ஒவ்வொருவரும் ஆளுக்கொரு மரம் நடுவோம் கட்டாயமாக அது ஒரு நல்ல பயனைத் தரும் எனினும் எமது எதிர்கால சந்ததியினர் தற்பொழுது வெவ்வேறு துறைகளில் மோகம் கொண்டுள்ளார்கள் குறிப்பாக தென்னிந்திய சினிமா மற்றும் தென்னிந்திய கலைஞர்களை இங்கே கொண்டு வந்து கொண்டாடுதல் போன்ற பல்வேறு துறைகளில் மோகம் கொண்டுள்ளார்கள் அவ்வாறான எதிர்கால சந்ததியினருக்கு எமது கடந்த கால வரலாறுகளை கடத்துவதற்கு இந்த மரநடுகை மாதமானது ஒரு உதாரணமாக காணப்படுகிறது.

மர நடுகை மாதமானது கார்த்திகை மாதம் தான் செயற்படுத்தப்படுகின்றது அதேபோல எமது இனத்துக்காக போராடி மடிந்த மாவீரர்களின் நினைவேந்தல் நிகழ்வுகளும் கார்த்திகை மாதத்தில் தான் இடம்பெறுகின்றது.

எனவே இந்த மரநடுகை மாதத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் எதிர்கால சந்ததியினருக்கு எமது கடந்த கால வரலாறுகளை கடத்துவதற்கு இலகுவாக இருக்கும் எனவும் தெரிவித்தார்.

## வட்டுக்கோட்டையில் பொலிஸ் சித்திரவதை கூடமா?

# அலெக்சின் மரணத்தின் எதிரொலி!

## விஞ்ஞான பூர்வ அறிக்கை கேட்கிறது மன்று!!



வட்டுக்கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சித்தங்கேணி கலைவாணிப் பகுதியைச் சேர்ந்த நாகராசா அலெக்ஸ் என்ற 23 வயது இளைஞன் வட்டுக்கோட்டை பொலிசாரின் சித்திரவதை காரணமாக உயிரிழந்தமை சாட்சி ஆதாரங்கள் மூலம் உறுதிப்படுத்தும் நிலையை எட்டி விட்டது.

சித்தங்கேணி கலைவாணி வீதியில் நாள் கூலித் தொழிலாளியான நாகராசா என்பவரின் நான்கு ஆண் மகனின் மூத்த மகன்.

குடும்ப நிலை காரணமாக தந்தையுடன் சேர்ந்து நாள் கூலி தொழிலாளியாக உழவு இயந்திரத்தில் பொருட்கள் ஏற்றி இறக்குதல் வீட்டு வளவு வேலைகள் செய்தல் இவனது பிரதான தொழிலாக காணப்பட்டது. குடும்பத்தில் ஏற்கனவே ஒரு ஆண்மகன் கிணற்றுக்குள் விழுந்து அகால மரணம் அடைந்த நிலையில் தற்போது தந்தையுடன் குடும்பத்தை தாங்கி நின்ற மூத்த மகன் அலெக்ஸ்சும் மக்களை பாதுகாக்க வேண்டிய பொலிஸாரின் செயல்பாட்டால் அகால மரணத்தை தழுவ வேண்டிய நிர்பந்தத்திற்கு தள்ளப்பட்டான்.

அலெக்ஸிடம் லான்ட் மாஸ்டர் வாகனம் உள்ளது. கடந்த 8ஆம் திகதி மரம் கடத்தல் சம்பந்தமான விசாரணை ஒன்று உள்ளதாக தெரிவித்த வட்டுக்கோட்டை பொலிஸார் குறித்த இளைஞனை கைது செய்தனர்.

இதனால் அலெக்ஸ் இளைஞன் பொலிஸ் நிலையம் செல்ல மறுக்க, அந்த இளைஞனுக்கு துணையாக அவரது நண்பனையும் பொலிஸார் அழைத்துச் சென்றதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட குறித்த இரு இளைஞர்களையும் காணாத உறவினர்கள் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையம் சென்ற நிலையில் அங்கு அவர்கள் இல்லை என உறவினர்களுக்கு பதில் கூறப்பட்டுள்ளது .

ஏற்காத உறவுகள் தங்கள் பிள்ளைகளை காட்டுமாறு வட்டுக்கோட்டை பொலிஸாருடன் தர்கத்தில் 8 ஆம் திகதி இரவு பொலிஸ் நிலையம் சென்றவேளை அலெக்ஸின் கதறல் சத்தம் பொலிஸ் நிலையத்தில் கேட்டது. இந்நிலையில் நாங்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்தோம் என உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

எட்டாம் திகதி கைது செய்யப்பட்ட அலெக்சை 24 மணி நேரத்துக்குள் நீதிமன்றத்தில் அல்லது நீதவான் வாசல் தலத்திற்கோ அழைத்துச் செல்லாமல் பொலிஸ் நிலையத்தில் வைத்திருந்தது ஏன்? என்ற கேள்விகளும் உள்ளது. அலெக்ஸ் 12ஆம் திகதி நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்ட போது அவன் மீது நகை திருட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்த நிலையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இளைஞன் மீது சுமத்தப்பட்ட திருட்டு நகை வழக்குக் கூட சோடிக்கப்பட்ட வழக்கு என அவனது உறவினர்கள் குற்றச்சாட்டுகின்றனர் ஏனெனில் குறித்த வீட்டில் நகை களவாடப்படவில்லை கைமாறி வைக்கப்பட்டதாக வீட்டாரால் தெரிவிக்கப்பட்டதாக கூறுகின்றனர்.

இன் நிலையில் நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட போதே அலெக்ஸ் உடல்நிலை சீராக இல்லை கைகள் வீங்கிய நிலையில் உடல் சோர்ந்து காணப்பட்டதாக சிறைச்சாலை வட்டாரங்கள் உறுதிப்படுத்தின. சிறைச்சாலையில் இருந்து இரண்டு தடவைகள் யாழ் போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அலெக்ஸ் அழைத்துச் செல்லப்பட்டு இருக்கிறார்.

வைத்தியசாலையில் இருந்து பெறப்பட்ட வீடியோ காணொளியில் தன்னை பொலிசார் சித்திரவதை செய்த விவரம் தொடர்பில் பல தகவல்களை வெளியிட்டுள்ளார் அலெக்ஸ்.

வைத்தியசாலையில் பரிசோதனைகளை முடித்துக் கொண்டு திரும்பிய அலெக்ஸ் சிறையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்ததாக கூறப்படுகிறது.

அலெக்ஸின் மரணத்தை தொடர்ந்து வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த தமிழ் பொலிஸ் உத்தியோகரான செல்வகுமார் மற்றும் பெரும்பான்மையின பொலிஸ் உயர் அதிகாரியான ஒருவர் மீது சம்பவத்தில் அன்று சித்திரவதை குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

குறித்த பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் தமிழ் உத்தியோத்தர் சமூக விரோத செயல்பாடுகளுடன் தொடர்பு பட்டவர் எனவும் குறித்த இளைஞன் அவரது செயற்பாடுகள் தொடர்பில் அறிந்ததால் அவனை பழி வாங்கும் முகமாக சித்திரவதை மேற்கொள்ளப்பட்டதாக பிரதேச மக்கள் பரவலாக குற்றச்சாட்டை முன்வைத்தனர்.

இவருடன் இணைந்து வட்டகோட்டை பொலிஸ் நிலையத்தை சேர்ந்த அதிகாரி ஒருவர் கப்பம் வாங்குதல் சமூக விரோத செயற்பாடுகளை ஊக்குவித்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதும் அப்போது மக்களின் குற்றச்சாட்டு. குறித்த பொலிஸ் அதிகாரி யாழ் மாவட்டத்திலுள்ள பல பொலிஸ் நிலையங்களில் கடமை ஆற்றிய காலப் பகுதியில் கடமையாற்றிய காலப் பகுதியில் பல குற்றச்செயல்களுடன் தொடர்புபட்டு கடமை இட மாற்றம் செய்யப்பட்டவர் என்பதும் ஆதாரங்களுடன் அம்பலமாகியது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அலெக்ஸ் உயிரிழந்த நிலையில் வெள்ளிக்கிழமை மாலை யாழ்ப்பாண நீதிமன்றத்தில் சட்டத்தரணிகள் செல்வதற்கு முன்னர் எந்த ஒரு பொலிசாரையும் சந்தேக நபர்களாக கூட பொலிஸார் கைது செய்யவில்லை.

வட்டுக்கோட்டை பொலிஸார் மீது சித்திரவதை மற்றும் சட்ட விரோதமாக தடுத்து வைத்திருந்தமை போன்ற குற்றச்சாட்டுகள் வெளிப்படையாக தெரிந்த நிலையிலும் கூட பொலிசார் பொலிசாரை காப்பாற்றுவதற்கு பல முயற்சிகள் எடுத்தமையும் அம்பலத்துக்கு வந்தது.

சந்தேக நபரான அலெக்ஸ் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்ட நிலையில் உயிரிழந்த சம்பவத்தை காரணமாக வைத்து சிறைச்சாலையில் சித்திரவதை செய்யப்பட்டு இறந்திருக்கலாம் என பொலிசார் திசை திருப்பம் முயற்சிகளும் இடம் பெற்றன. ஆனால் அலெக்சின் உறவினர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து சித்திரவதை இடம் பெறுவதாக கடந்த பத்தாம் திகதி வழங்கிய முறைப்பாடு காரணமாக சிறைச்சாலை மீது பழி போடும் முயற்சிகள் பிசுபிசுத்து போனது.

அலெக்சின் மரணம் இயற்கை மரணம் அல்ல உடலில் காயங்கள் இருப்பது உறுதி சட்ட வைத்திய அதிகாரி .

யாழ் போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரியான மயூரதன் தனது அறிக்கையில் குறித்த இளைஞனின் மரணம் இயற்கை மரணம் அல்ல என தெரிவித்த நிலையில் இளைஞனின் மரணத்திற்கு காரணம் பொலிசாரின் சித்திரவதை என்பது தெளிவாக புலப்படுகிறது.

அது மட்டும் அல்ல அது உடலில் காயங்கள் இருப்பதை உறுதிப்படுத்திய சட்ட வைத்திய அதிகாரி கடுமையான சித்திரவதைகள் காரணமாக சிறுநீரக பாதிப்பு ஏற்பட்டிருக்கலாம் என்ற ஐயப்பாட்டையும் மறைமுகமாக தனது அறிக்கை வாயிலாக தெளிவுபடுத்தியுள்ளார்.

உயிரிழந்த அலெக்சுக்கு நீதி கேட்டு சிரேஷ்ட சட்டத்தரணி ஸ்ரீ காந்தா தலைமையிலான சுமார் 40க்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் ஒரே தடவையில் தோன்றி மன்றில் சமர்ப்பணம் செய்தனர்.

ஐந்து சாட்சியங்களை ஆதாரமாக வைத்து அலெக்ஸ் இறந்தமை கொலை என்ற வாதத்தை முன்னிலைப்படுத்தி நீதிமன்றத்தின் கவனத்திற்கு சட்டத்தரணிகள் கொண்டு வந்தனர்.

நீதிமன்றத்தில் சாட்சியங்களை வினவும்போது சட்ட வைத்திய அதிகாரி தனது அறிக்கையில் சொல்லப்பட்ட விடயங்களை நீதிமன்றத்திற்கு முன் வைத்த நிலையில் குறித்த மரணம் ஒரு ஆட்கொலை என நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது.

அதுமட்டுமல்லாது சாட்சி நபரான அலெக்ஸ் உடன் கைது செய்யப்பட்ட நபர் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் இரண்டு பொலிசாரையும் ஏற்கனவே பொலிஸ் விசாரணை வலையத்தில் இருந்த இருவர் உற்பட இன்னொருவரையும் சேர்த்து ஐந்து பேரை கைது செய்யுமாறு நீதவான் ஆனந்த ராஜா உத்தரவிட்டார்.

அலெக்சுடன் கைது செய்யப்பட்ட நபர் வழங்கிய தகவலின் அடிப்படையில் வட்டுக்கோட்டை பொலிஸார் தம்மை வாகனத்தில் அழைத்துச் சென்று பிறிதொரு பகுதியில் வைத்து தாக்கி துன்புறுதியதாக நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

சந்தேக நபர்களை சித்திரவதை செய்வதற்காக வட்டுக்கோட்டை பொலிஸார் வெளியில் சித்திரை கூடம் வைத்துள்ளார்களா என்ற சந்தேகங்கள் வலுக்கும் நிலையில் நீதிமன்றம் குறித்த பகுதிகள் தொடர்பில் விஞ்ஞான நீதியான அறிக்கையை வழங்க பொலிஸாருக்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

சந்தேக நபரை குறித்த பகுதிகளை காட்டுவதற்காக வெளியில் அழைத்துச் செல்லும் போது சட்டத்தரணிகளின் கோரிக்கைக்கு ஏற்ப இரு சட்டத்தரணிகள் உடன் இருக்க வேண்டும் என மன்று கட்டளை பிறப்பித்துள்ளது.



# ஜனநாயகப் போராளிகள் கட்சியின் உபதலைவர் என்.நகுலேஸ் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது!!

ஜனநாயகப் போராளிகள் கட்சியின் உபதலைவர் என்.நகுலேஸ் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு 14 நாட்கள் விளக்கமறியல்...

வடக்கு கிழக்கு தழுவிய ரீதியில் மாவீரர் தினத்தை முன்னிட்டு பல நிகழ்வுகள், மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்ற நிலையில் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஏற்பாட்டில் வெல்லாவெளியில் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில் பொலிசாரால் நீதிமன்றத் தடையுத்தரவு மூலம் தடுத்து நிறுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து நிகழ்வின் ஏற்பாட்டாளரான ஜனநாயகப் போரளிகள் கட்சியின் உபதலைவர் என்.நகுலேஸ் விசாரணை என்ற பெயரில் பொலிசாரினால் அழைத்துச் செல்லப்பட்டார். சுமார் மூன்றரை மணிநேரம் வெல்லாவெளி பொலிஸ் நிலையத்தில் விசாரணை இடம்பெற்று மாலை 04.30 மணியளவில் களுவாஞ்சிக்குடி நீதவான நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்த நிலையில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் பொலிசாரினால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு 14 நாட்கள் விளக்க மறியலில் வைப்பதற்கான உத்தரவை களுவாஞ்சிக்குடி நீதவான் பிறப்பித்ததையடுத்து மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



மாவீரர் பெயர் தாங்கிய நினைவு மண்டபம் திறக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி டிப்போ சந்தியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் குறித்த நினைவு மண்டபம் திறந்து வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வு வெள்ளிக்கிழமை 4.30 மணியளவில் இடம்பெற்றது. நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் கலந்துகொண்டிருந்தார்.



தமிழ் மக்களுக்கான உரிமை போரில் உயிரிழந்த மாவீரர்களின் பெற்றோர்களை மதிப்பளிக்கும் நிகழ்வு ஒன்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றது முல்லைத்தீவு மாவட்டத்தில் விசுவமடு பிரதேசத்தில்குறித்த மாவீரர் பெற்றோர்களை மதிப்பளிக்கும் நிகழ்வு சிறப்புற நடைபெற்றுள்ளது.

மாவீரர்களின் பெற்றோர்கள் அழைத்துவரப்பட்டு சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட கொட்டகைகளில் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு மாவீரர்களுக்கான பொது திருவுருவப்படத்திற்கு சுடர் ஏற்றி மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

இதன்போது 150 வரையான மாவீரர் பெற்றோர்கள் மதிப்பளிக்கப்பட்டுள்ளார்கள் குறித்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ்நிர்மலநாதன் அவர்களும் கலந்து சிறப்பித்துள்ளார்.

# வாகரை துயிலுமுல்லமும் தகர்க்கப்பட்டது...



எதிர்வரும் மாவீரர் தினத்தை முன்னிட்டு வாகரை துயிலுமில்லத்தில் மாவீரர் தின ஏற்படுகள் பிரதேச இளைஞர்களால் முன்னெடுக்கப்பட்டு மிக எழுச்சி பூர்வமாக துயிலுமில்லம் தயார் படுத்தப் பட்டிருந்த நிலையில் இத்துயிலுமில்லம் இனந்தெரியாத நபர்களால் தகர்க்கப்பட்டுள்ளது.

துயிலுமில்லத்தில் அமைக்கப்பட்டிருந்த வேலிகள் உடைக்கப்பட்டு, கொடிகள் அனைத்தும் கழற்றப்பட்டு, மாவீரர் கல்லறைக்கற்கள் தகர்க்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கொக்குதொடுவாய் மனித புதைகுழியானது

## வீதியின் ஊடாக செல்லும் சாத்தியக்கூறுகள்

## முல்லைத்தீவு மாவட்ட விஷேட சட்ட வைத்திய அதிகாரி



கொக்குதொடுவாய் மனித புதைகுழியானது வீதியின் ஊடாகவும் ஏனைய பகுதிகள் ஊடாகவும் செல்லக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன.

என முல்லைத்தீவு மாவட்ட விஷேட சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவா தெரிவித்தார்.

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வு பணியானது ஐந்தாவது நாளாக வியாழக் கிழமை (24.11.2023) இடம்பெற்று அகழ்வு பணியானது நிறைவடைந்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்,

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

ஐந்தாவது நாளாக தொடரும் கொக்குதொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வின்போது நான்கு மனித எலும்புக்கூடுகளின் எச்சங்கள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் துப்பாக்கி சன்னங்களும் குண்டு சிதறல்களும் மீட்கப்பட்டுள்ளது. அத்துடன் பேனா மாக்கர் ஒன்றும் எடுக்கப்பட்டுள்ளது.

வியாழக்கிழமை ஸ்கானர் மூலம் இந்த புதைகுழியானது எவ்வளவு தூரம் பரந்து வியாபித்துள்ளது என பரிசோதனை செய்யப்பட்டது இதன் முடிவுகள் நாளையதினம் அகழ்வு பரிசோதனை பணி நிறைவுற்றதன் பிற்பாடே கிடைக்கப்பெறும்.

இவ் புதைகுழியானது வீதியின் ஊடாகவும் மற்றைய பகுதிகள் ஊடாகவும் செல்லக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. எனினும் பரிசோதனையின் பின்னரே இறுதி முடிவுகள் என்னால் உறுதியாக கூறமுடியும் என மேலும் தெரிவித்தார்.







மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு!
வடமராட்சி பருத்தித்துறை மாலை சந்தை(மாலு சந்தி)





வட்டுக்கோட்டை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நடைபெற்ற மாவீரச் செம்மல்களின் பெற்றோர் கௌரவிப்பு!




**தலைமையகம்**
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 4353 / 0777 22 5292
kirubalearners@gmail.com
www.kirubalearners.com

| | | | |
|---|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 | ஆவரங்கால் 021 222 6688 |
| சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 | பூநகரி 021 320 1818 | முழங்காவில் 021 300 6544 |
| விஸ்வமடு 021 320 1515 | மன்னார் 023 225 1656 | கிளிநொச்சி 021 228 5505 | வவுனியா 024 222 7777 |


# சமூகப் பணியே எமது முதற்பணி.

## தியாகி அறக்கட்டளையின் சமூகப் பணிகள் (பாகம் 1)


அனுராதபுரத்தில் மின்னல் தாக்கத்தில் உயிரிழந்த குடும்பங்களுக்கு தலா ஒரு இலட்சம் வீதம் உதவித்தொகை


அம்பாறையில் மின்னல் தாக்கியதில் உயிரிழந்த குடும்பத் தலைவருக்கு ஒரு இலட்சம் ரூபா


நானாட்டான் பிரதேச விளையாட்டு வீரர்கள் இருவருக்கு தியாகி பெறுமதியான இரண்டு காலனிகளை வழங்கினார்




வெளிநாடு செல்ல முற்பட்டு இடை நடுவில் உயிரிழந்தவர் குடும்பத்தாரின் மரணவீட்டு செலவுக்கு ஒரு இலட்சம் ரூபா நிதி உதவி


சிங்கப்பூரில் இடம்பெற்ற வலைப்பந்தாட்ட போட்டியில் பங்குபற்றிய மாணவி சுபாஷிணிக்கு இரண்டு இலட்சம் ரூபா





**தமிழ் பேசும் மக்களின் தேசிய பத்திரிகை!**

இப்பத்திரிகை 26.11.2023 அன்று அகரவ் பப்ளிசிங் ரூ மீடியா பிறின்டிங் ஹவுஸ் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால், யாழ்ப்பாணம், கண்ணாதிட்டி வீதியில் 27ஆம் இலக்கத்திலுள்ள பணிமனையில் தயாரிக்கப்பட்டு, வெளியிடப்படுகின்றது.